Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 25 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 07 (11.10.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:11

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேடசலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
திருமுருகன் கொம் நெற்
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
முருகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

## உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்ட 2 ஆம் லெப். மாலதியின் நினைவுநாள்




யாழ்ப்பாணம்

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 18ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மவாட்டத்தில் பிரதான நிகழ்வு 2ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்த கோப்பாய் சந்திக்கு அண்மையாகவுள்ள நினைவுத்தூபியின் முன் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கோப்பாய் சந்தியில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் வைக்கப்பட்டிருந்த 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை (12 ஆம் பக்கம் பார்க்க)

## உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு!

கிளிநொச்சி

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, உலக உணவுத் திட்டத்தின் ரோம் தலைமையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் போல்ஸ்கைற்றி கிறிஸ்றோபசன் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுக்காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் (12 ஆம் பக்கம் பார்க்க)



# போரை எதிர்கொள்ள இராணுவம் தயார்!



### இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட கூளுரை

கொழும்பு

எந்தவொரு எதிர்பாராத சூழ்நிலையிலும் போரை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராகவே உள்ளனர். இராணுவத்தினர் இப்போது மிகப் பலம் வாய்ந்த நிலையில் இருக்கின்றனர். மேலும் அதிநவீன ஆயுதங்களை வாங்குவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருப்பதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற அணிவகுப்பு நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் கொழும்பு பத்திரிகையொன்றுக்குப் பேட்டியளித்த போதே (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட தூதுவர் நேற்று கொழும்பு வருகை!

கொழும்பு

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரான மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் [illegible] நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுக்களை நடத்த நோர்வேயின் தூதுவராக இலங்கை வந்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டேயை போர்நிறுத்தக் கண் [illegible]

## சந்திரிகா - மகிந்த 4 மணிநேரம் பேச்சு!

கொழும்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சுதந்திரக் கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை இரவு சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

சந்திரிகாவின் இல்லத்தில் இரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை சுமார் 4 மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

## காயத்திரி பீடாதிபதியின் மடம் மீசாலையில் எரிப்பு! இனந்தெரியாதோர் கைவரிசை





யாழ்ப்பாணம்

மீசாலை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதியின் அலுவலகம் மற்றும் மடம் ஆகியன அமைந்துள்ள இடத் [illegible]

கொழும்பு

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரான மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே போர் நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுக்களை நடத்த நோர்வேயின் தூதுவராக இலங்கை வந்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டேயை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் வரவேற்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோன் புலனாய்வுப் பிரிவினரால் கைது!

கொழும்பு

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக தமிழ் வர்த்தகரான சாள்ஸ் ஞானக்கோன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

தெகிவளை - நிக்கபே என்ற இடத்தில் நேற்று அதிகாலை 2மணியளவில் விசேட இராணுவ புலனாய்வு குழுவொன்று சாள்ஸ் ஞானக்கோனிருந்த வீட்டைச் சுற்றிவளைத்து அவரைக் கைது செய்தது.

சந்தேகத்துக்கிடமான இவர் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து இந்த வீடு சோதனையிடப்பட்டபோதே சாள்ஸ் ஞானக்கோன் அங்கு தனித்திருந்ததாகவும் - இவர் மேலதிக விசாரணைக்காக கல்கிசை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரை நீதிமன்றத்தில் பொலிஸார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திரக் கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை இரவு சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

சந்திரிகாவின் இல்லத்தில் இரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை சுமார் 4 மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, பிரதமரின் துணைவியார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிப்பாயின் சூட்டில் படையதிகாரி காயம்!

திருகோணமலை


திருமலை மாவட்டத்திலுள்ள அயயபுரவில் இராணுவ காவலரணிலிருந்த சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை அயயபுர இராணுவ முகாம் முன்னணிக் காவலரணில் நடந்த இந்தச் சம்பவத்தில் லெப்ரினன்ட் வி.பி.மித்திரபால என்ற அதிகாரியே இடது கையில் காயமடைந்தார்.

குறிப்பிட்ட அதிகாரியின் நடமாட்டத்தில் சந்தேகம் ஏற்பட்டதாகவும் ஆள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இனந்தெரியாதோர் கைவரிசை



யாழ்ப்பாணம்

மீசாலை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதியின் அலுவலகம் மற்றும் மடம் ஆகியன அமைந்துள்ள இடத்திற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அங்குள்ள பொருட்களை உடைத்து நொருக்கியதுடன் பீடாதிபதியின் அலுவலகத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிலாபம் - மாரவில பகுதியில் நவீன ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஜனாதிபதி சந்திரிகா இன்று வாரியப்பொலவில் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ள நிலையில் மாரவில பகுதியில் நவீன ஆயுதங்கள் கொண்ட பொதியொன்றை பொலிஸார் கைப் பற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

சிலாபம் மாரவில பகுதிக்கு அருகிலுள்ள மகரவெவ என்ற இடத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் வீதியோரத்தில் காணப்பட்ட சந்தேகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்தவுக்கு ஆதரவாக சந்திரிகா பதினொரு கூட்டங்களில் பங்கேற்பு!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக - ஜனாதிபதி சந்திரிகா குருநாகல் மாவட்டத்தில் உள்ள வாரியப்பொலவில் இன்று பிரசாரம் செய்யவிருப்பதாக மகிந்த ராஜபக்ஷவின் பிரசார அலுவலகம் தெரிவித்தது.

வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவுடன் ஜனாதிபதி சந்திரிகா பதினொரு பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார்.

வாரியப்பொல, ஹிங்குராங்கொட, காலி, கண்டி, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் பல இடங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக நடைபெறும் கூட்டங்களில் மட்டும் ஜனாதிபதி பங்கேற்பார் என்றும் -

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய சார்பில் இந்தக் கூட்டங்களில் எவரும் பங்கேற்க மாட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

# ஜே.வி.பி. வெளியிடும் கருத்துக்கள் நாட்டை யுத்தத்துக்குள் தள்ளிவிடும்!



## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

கொழும்பு

ஜே.வி.பியினரின் கருத்துக்கள் நாட்டை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளும் வகையில் - ஆபத்தானதாக இருப்பதாகவும் -

நடைமுறைச் சாத்தியமில்லாத விடயங்கள் குறித்து ஜே.வி.பியினர் கதைத்து வருவதாகவும் வெளி விவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 2 ஆம் லெப். மாலதியின் 18 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்விலிருந்து



## சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுவர், முதியோர்தின விழாவையொட்டி நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கவிதை, கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு-

**சிறுவர் தினப் போட்டி**
**கீழ்ப்பிரிவு**
**கட்டுரை**

1ஆம் இடம்-சி.அனுஷா (உடுத்துறை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - ஜெ.விநோத் (ஆழியவளை சி.சி.த.பாடசாலை), 3 ஆம் இடம் - உ.கிசாந்தினி (குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை).

**கீழ்ப்பிரிவு**
**கவிதை**

1ஆம் இடம் - த.ஜென்சிதம் (உடுத்துறை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - ம.நிதர்சனன் (குடத்தனை அ.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - உ.தயதீபா (மருதங்கேணி இ.த.க. பாடசாலை).

**மத்திய பிரிவு**
**கட்டுரை**

1 ஆம் இடம் - க.நிரோஜினி (மருதங்கேணி இ.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - ம.திரேசா (குடத்தனை அ.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - ஜ.பிறேம் (உடுத்துறை மகாவித்தியாலயம்).

**மத்திய பிரிவு**
**கவிதை**

1ஆம் இடம்-கா.கோபிகா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - பா.விஜிதா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - தே.பிறின்சியா (மணற்காடு றோ.க. பாடசாலை).

**மேற் பிரிவு**
**கவிதை**

1ஆம்இடம்- எஸ்.யுக்தஸ (ஆழியவளை அ.மி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - மேரி.சுதர்சினி (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - எஸ்.விஜிதரன் (ஆழியவளை அ.மி.த.க. பாடசாலை).

**மேற் பிரிவு**
**கட்டுரை**

1 ஆம் இடம் - சசிகரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - திலீபன் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை),

**முதியோர் தின**
**கீழ்ப்பிரிவு**
**கட்டுரை**

1ஆம் இடம் - சி.கலைமகள் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - க.கஜானா (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம்- ஞா.செந்துஷா (உடுத்துறை மகாவித்தியாலயம்).

**கீழ்ப்பிரிவு**
**கவிதை**

1 ஆம் இடம் - அ.மரியசர்மனா (மணற்காடு றோ.க. பாடசாலை), 2 ஆம் இடம் - இ.நிஷாந்தினி (உடுத்துறை மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் - ஜெ.ஜெயபிரசாந்தி (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை).

**மத்திய பிரிவு**
**கட்டுரை**

1 ஆம் இடம் - செ.நிதிபா (உடுத்துறை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - த.கௌசிகா (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - யோ.சரிதா (மணற்காடு றோ.க. பாடசாலை).

**மத்திய பிரிவு**
**கவிதை**

1 ஆம் இடம் த.சுனிதா (மருதங்கேணி இந்து த.க.பாடசாலை), 2 ஆம் இடம் - ந.கம்சியா (மருதங்கேணி இந்து த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - யோ.கனிஸ்டாறேனஸ் (மணற்காடு றோ.க. பாடசாலை).

**மேற் பிரிவு**
**கட்டுரை**

1ஆம் இடம் - இ.வசிதரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - த.சசிகுமார் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - வி.யசோதா (அம்பன் அ.மி. பாடசாலை).

**மேற் பிரிவு**
**கவிதை**

1ஆம்இடம்-ஆ.இளங்கோ (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம் - கே.சத்தியவதி (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம் - மேரி சியாளினி (அம்பன் அ.மி.த.க. பாடசாலை). (17)

## வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்த நேரம் மாற்றம்

வடமராட்சி

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள வல்லிபுர ஆழ்வார் சமுத்திரத் தீர்த்தோற்சவம் 3.30 மணிக்கு இடம்பெறுமென ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி, நண்பகல் 1 மணிக்கு கொடித்தம்ப பூசையும், 1.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெறும். 2.30 மணிக்கு எம்பெருமான் ஆலயத்திலிருந்து தீர்த்தமாட கடற்கரை நோக்கிச் செல்வார்.

3.30 மணிக்கு இடம்பெறும் தீர்த்தோற்சவத்தை அடுத்து மாலை 5 மணிக்கு எம்பெருமான் கடற்கரையிலிருந்து ஆலயம் திரும்புவார்.

முன்னதாக சமுத்திர தீர்த்தோற்சவம் அன்றைய தினம் மாலை 5மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய தினம் 5 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திரகிரகணம் நிகழவுள்ளதாலேயே மேற்படி நேர மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (20)

## நெதர்லாந்து - யாழ். மாநகர சபைக்கு 2 உழவு இயந்திரங்களை வழங்கியது

யாழ்ப்பாணம்

நெதர்லாந்து அரசால் யாழ். மாநகர சபைக்கு இரண்டு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ் உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் ஆ.எஸ்.வான்டிக் உழவு இயந்திரங்களை யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானத்திடம் கையளித்தார். தூதுவருடன் நெதர்லாந்து தூதுவராலயத்தைச் சேர்ந்த வந்துல கெனடிக்கும் வருகை தந்திருந்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி. கே. சிவஞானம் மற்றும் நெதர்லாந்து தூதுவர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நெதர்லாந்து தூதுவர் வன்டிக் உரையாற்றுகையில் -

யாழ். மாநகரத்தை தொழில் நுட்ப ரீதியில் முன்னேற்றுவதற்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்கவுள்ளோம். யாழ். மாநகரம் முன்பு இருந்த நிலையை அடைய நீண்ட காலம் எடுக்கும். நாம் தூரதேசத்தில் இருந்தாலும் இங்குள்ள நிலையை அறிந்த வண்ணமே உள்ளோம்.

நாம் இங்குள்ள நிலையை உணர்ந்து, முடிந்த அளவுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வோம் எனத் தெரிவித்தார்.

## வாணி விழா

புங்குடுதீவு

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயத்தின் வாணிவிழா நாளை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் சி.இரத்தின சபாபதி, சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா, கிராம சேவையாளர் சந்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும், ஏடு தொடக்குதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

☆ ☆ ☆ ☆

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வாணிவிழா பாடசாலையின் பிரதான மண்பத்தில் இன்று காலை 11 மணிக்கு அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

## குருபூசை

யாழ்ப்பாணம்

சிவஸ்ரீ சின்னத்தம்பி சுவாமிகளின் மகாசமாதி வருடாந்த குருபூசை இன்றும், அவரின் பிரதம சிஷ்யர் சிவஸ்ரீ முருகுப்பிள்ளை (மௌனகுரு) கடவுள் சுவாமிகளின் மகாசமாதி வருடாந்த குருபூசை எதிர்வரும் 16 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் மறவன்புலோ, கைதடி, நாவற்குழி சமாதி குருபீடத்தில் விசேட அபிஷேகம், பஜனை, பிரார்த்தனை, ஆன்மீகப் பேருரைகளும், தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.


சுன்னாகம் நாகம்ஸ்
ஜெயம் ரவி, கலாபவன் மணி, வடிவேல் மற்றும் பலர் நடித்த
மழை



காட்சிகள்:-11.00, 3.00, 7.00, 10.00 (பழையநேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஜோதிகா மற்றும் பலர்நடித்த
ராஜா
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்யா



காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (ப.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
இன்று முதல்
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
விசேட விலைக் குறைப்பில் புத்தகங்கள்
இம்மாதம் 31 ஆம் திகதி வரை
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
AHAVILI, 3, Torrington Avenue, Colombo-7, Sri Lanka. Tel : 011-2506271 E-mail : ahavili@vilutku.org
BOOK LAB
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(C/4683)

# இ.தொ.காவின் முடிவு அரசியல் தற்கொலையா?

# பொறுத்திருந்து பார்க்கட்டும் மங்கள சமரவீர!

## ஆங்கில பத்திரிகை பேட்டியில் தொண்டமான்





**கொழும்பு**

**ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இ.தொ.கா எடுத்த முடிவானது அரசியல் தற்கொலையா என்பதை மங்கள சமரவீர பொறுத்திருந்து பார்க்கட்டும். இ.தொ.கா இல்லாமலேயே மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்று பிரதி அமைச்சர் சூரியாராச்சி கூறியுள்ளார். அதற்கும் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு விடை கிடைக்கும் என ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.**

**கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -**

இரு வேட்பாளர்களிடமும் எங்களது 19 நிபந்தனைகள் குறித்து பேசினோம் ரணில் விக்கிரமசிங்க முழுமையாக எங்களது நிபந்தனைகளை ஏற்பதாகத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ எங்களது நிபந்தனைகளை ஏற்றாலும் ஜே.வி.பியுடன் அவர் இணைந்திருப்பது ஆச்சரியமளிக்கிறது. ஆயிரக்கணக்கான மலையகத் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்தது ஜே.வி.பி. இன்றும் மலையகத் தமிழர்களை அச்சுறுத்திவருகிறது ஜே.வி.பி.

அது ஒரு இனவாதக் கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷவால் அமைதி முயற்சிகளில் வெற்றி பெற முடியாது என்று கருதுகிறோம். ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடனான மகிந்தவின் கூட்டணியால் மிகுந்த வருத்தமடைந்துள்ளோம்.

தனிப்பட்ட மகிந்த ராஜபக்ஷவால் இந்த நாட்டிற்கு சிறந்த பங்களிப்புச் செய்யமுடியும். ஆனால் ஜே.வி.பியுடன் இணைந்துள்ள நிலையில் மலையகத்துக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டுக்குமே மகிந்தவால் எந்த பங்களிப்பையும் செய்துவிட முடியாது.

தான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போன்ற உறுதியான நடவடிக்கைகளை ரணில் மேற்கொண்டார். அதன் விளைவாகத்தான் இன்று நாம் அனைவரும் அமைதியை அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். அப்படியான உறுதியான நடவடிக்கையை வேறு எந்த ஒரு அரசியல் தலைவரும் எடுத்தது இல்லை. அவர் நாட்டின் அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இன்னும் கூடுதலான பணிகளை செய்வார்.

மலையக மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய சந்திரிகா குமாரதுங்க எங்களை அமைச்சரவையில் இணைத்துக்கொண்ட அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். அவருடனான அண்மைய சந்திப்பில் மகிந்த- ஜே.வி.பி கூட்டு குறித்த கவலையை வெளியிட்டோம்.

மகிந்தவுடன் இது தொடர்பாக பேசுவதாக அவர் கூறியிருந்தார். என்னுடைய தாத்தாவின் மிக நெருங்கிய நண்பர். அதற்காக அவர் ரணிலுடன் கூட்டணி சேர என்னை தூண்டிவிடவில்லை என்னை யாரும் தூண்டிவிடமுடியாது.

இ.தொ.கா சார்பில் கட்சி நிர்வாகிகளான செல்லச்சாமி, யோகராஜன், சந்நிதானந்தன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த விடயங்களை ஆராய்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பது சரியானது அல்ல என்று அறிக்கையளித்தனர். அதன் அடிப்படையிலேயே ரணிலை ஆதரிக்க முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் பணம் வாங்கியதாக மகேஸ்வரன் கூறிவருகிறார். மண்ணெண்ணெய் விற்பவர்கள் பற்றியெல்லாம் நான் பேசவில்லை காலி பாத்திரங்கள்தான் மிகப்பெரிய சத்தங்களை எழுப்புகின்றன. ரணில் விக்கிரமசிங்கவை நான் ஆதரித்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிருவதாக மகேஸ்வரன் அறிவித்தார். பொறுத்திருந்து பார்ப்போம்.

இ.தொ.காவின் 2 அமைச்சர்களும் அமைச்சரவையிலிருந்து விலகுவர். பிரதி அமைச்சர் பைசல் முஸ்தபா எங்கள் முதுகில் குத்திவிட்டு ஓடியவர் அவர் என்ன திட்டங்கள் வைத்துள்ளார் என்பது தெரியாது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையில் தீர்வு காண முடியாது குறிப்பிடத்தக்கது அளவில் அதிகாரப் பகிர்வு மூலமே பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் எனத் தொண்டமான் தெரிவித்தார்.

## பொலிஸ் ஜீப் மீது கைக்குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனையிலிருந்து கல்குடா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் ஜீப் மீது கடந்த சனிக்கிழமை மாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 6 பொலிஸார் சென்ற ஜீப் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது பொலிஸாருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

பொலிஸாரும் படையினரும் உடனடியாக அப்பகுதியில் தேடுதல் நடத்தியபோதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## ஐ.தே.கவில் தம்மாலோக தேரர்

கொழும்பு

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான உடுவே தம்மாலோக தேரர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவிருப்பதாகவும், இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் இவர் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் திணைக்கள விதிமுறைகளை மீறி மூன்று பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

## பொலிஸ் மா அதிபர் ஒப்புக்கொள்கிறார்



கொழும்பு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் கலந்தாலோசிக்காமல் மூன்று பொலிஸ் அதிகாரிகளை தான் இடமாற்றியதை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த மூன்று பொலிஸ் அதிகாரிகளும் தலாவ, திரிப்பனே மற்றும் அளவ்வை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக இடமாற்றப்பட்டனர்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் இந்தச் செயலை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய வன்மையாக கண்டித்துள்ளார்.

எந்தவொருபொலிஸாருக்கும் மாற்றம் கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் முதலாம் திகதிவரை மேற்கொள்ளக் கூடாதென பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்கு கடந்த செப்ரம்பர் 26 ஆம் திகதி ரஞ்சித் அபேசூரிய கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இதேவேளை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுடன் எவ்வித கலந்தாலோசனையும் நடத்தாமல் இந்த பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டதனை பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோவும் வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்த இடமாற்றம் தேர்தல் சட்டவிதிகளை மீறும் கடுமையான வன்செயலெனவும், இவ்வாறான இடமாற்றங்கள் இதற்கு முன்னர் இடம்பெறவில்லையெனவும், ஆனால் தற்போதே இந்த இடமாற்றத்தை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இந்த 3 பொலிஸ் அதிகாரிகளையும் காவலரண்களிலிருந்தே இடமாற்றியதாகவும், பொலிஸ் நிலையங்களிலிருந்து அல்ல என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில் ஏன் பொலிஸ் அதிகாரிகளை காவலரணில் கடமைக்கு விட்டீர்கள் என நான் பொலிஸ் மா அதிபரிடம் கேட்டபோது - அதற்கு அவர் சரியான காரணத்தை தெரிவிக்கவில்லையெனவும் றொட்றிக்கோ தெரிவித்தார்.

இதேவேளை, வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேம்லால் திஸநாயக்கவின் உத்தரவுப்படியே இந்த மூன்று பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் அதிபர் சந்திரா பெர்னாண்டோ இடமாற்றியதாக தகவல்கள் தெரிவித்தன.

# வடக்கு–கிழக்கு பகுதிகளிலிருந்து 5 ஆயிரம் பொலிஸார் கொழும்புக்கு!

## இடம்மாற்றுவதற்கு அரசு யோசனை

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தென்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள பொலிஸாரில் ஒரு தொகுதியினரை தென்பகுதிக்கு இடம்மாற்றுவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிற்கும், பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிற்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது.

வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பெருமளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 5000 பேரை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக கொழும்புக்கு இடம் மாற்றுவதாக பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரட்ணவீர தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் பொலிஸார் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்பில் இருப்பதை விடவும் இந்தப் பகுதிகளில் இருப்பதால் நல்ல ஊதியத்தைப் பெறுகின்றனர். எனவே, இந்த தேர்தல் காலத்தில் இப்பகுதியிலிருந்து 5,000 பொலிஸாரை கொழும்பிற்கு இடம்மாற்றவுள்ளோம்.

முன்னர் நடந்த பொதுத்தேர்தலின்போது 1000 பொலிஸார் அம்பாறையிலிருந்தும், 1000 பொலிஸார் யாழ்ப்பாணத்திலிருந்தும், 1000 பொலிஸார் வவுனியாவிலிருந்தும் கொழும்பிற்கு இடமாற்றப்பட்டனர்.

தற்போது யுத்த பிரதேசங்களான வடக்கு - கிழக்கு பகுதியிலிருந்து இந்தப் பொலிஸார் கொழும்பிற்கு இடமாற்றப்பட்டாலும் அப்பகுதிகளில் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஏற்கனவே உள்ள 65,000 படையினருடன் மேலதிகமாக 20 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வன்முறைகளற்ற வகையில் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்தவே எனவும் அவர் தெரிவித்தார்.

# சகல வழிகளிலும் தமிழருக்கு ஜே.வி.பி பாதகம் செய்கிறது!

## இ.தொ.கா குற்றச்சாட்டு

கொழும்பு

தமிழ்மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து செயல்களையும் ஜே.வி.பி மேற்கொண்டு வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக மாத்தளை ரத்தோட்டையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

பேச்சுவார்த்தைக்கு தடையை ஏற்படுத்துவதுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் சென்று சேருவதற்குரிய வழிவகைகளையும் ஜே.வி.பி தடுத்துவிட்டது.

ஜே.வி.பி இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை தமது பிடிக்குள் வைத்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# காஞ்சிரங்குடா படுகொலைகள்; நேற்றுமுன்தினம் அஞ்சலி நிகழ்வு

அம்பாறை

அம்பாறை மாவட்ட காஞ்சிரங்குடாவில் 9-10-2002அன்று விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் ஏழு பேரினதும் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றன.

திருக்கோவில்- விநாயகபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள இந்த நாட்டுப்பற்றாளர்களின் நினைவுத் தூபிக்கு முன்னால் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத் தலைவர் உதயன் தலைமை தாங்கினார்.

ஈகச்சுடரை திருக்கோவில் ப.நோ.கூ.ச தலைவர் க.செல்வராசா, சமுர்த்தி அலுவலர் த.சுந்தரமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து இந்த நாட்டுப்பற்றாளர்களின் பெற்றோர்கள் தூபிக்கு மலர்மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.


தொடர்ந்து திருக்கோவில் பிரதேச விவசாய கம்பனி முகாமையாளர் க.கங்காதரன், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிமனை கணக்காளர் ச.கணேசமூர்த்தி, தம்பிலுவில் கிராம சேவை அலுவலர் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

நன்றியுரையை மின்னொளி விளையாட்டுக்கழகப் பொறுப்பாளர் த.சந்திரசேகரன் வழங்கினார். பெருமளவான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு நாட்டுப்பற்றாளர்களை நினைவுகூர்ந்தனர்.

### ஆனையூர் யூனியன் கழக கிரிக்கெட்

# ஏ2கே அணியைத் தோற்கடித்து நொதேண் அணி சம்பியனானது!





யாழ்ப்பாணம் —

ஆனையூர் யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்திய 9 பேர் கொண்ட 12 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் நொதேண் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவானது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் மாலை 4.00 மணியளவில் யூனியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஏ2கே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்கியது. 12 ஓவர்களில் இந்த அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. ஏ2கே அணி வீரர் ரமேஸ் 14 ஓட்டங்களையும், சுகந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். நொதேண் விளையாட்டுக்கழக வீரர் திவ்யராஜ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நொதேண் விளையாட்டுக் கழகம் 11 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

நொதேண் விளையாட்டுக்கழக வீரர் துஷ்யந்தன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும், உமேஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். ஏ2கே அணி வீரர் நாகதாஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் நொதேண் விளையாட்டுக்கழக வீரர் துஷ்யந்தனும், சிறந்த பந்துவீச்சாளராக ஏ2கே விளையாட்டுக்கழக வீரர் நாகதாஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற நொதேண் விளையாட்டுக் கழகத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் எஸ். சாந்தசீலன் வழங்கி கௌரவித்தார்.

# சுப்பர் சீரிஸ் வெற்றியால் பொண்டிங்கிற்கு நிம்மதி!



மெல்போர்ன் —

உலக லெவன் அணிக்கு எதிரான மூன்று போட்டிகளிலும் மகத்தான வெற்றியைப் பெற்ற அவுஸ்ரேலிய அணி - உலகின் முதன்மையான அணி என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

அவுஸ்ரேலிய அணிக்கு கிடைத்த மகத்தான வெற்றி என்று ஒருபுறம் இருந்தாலும், இந்த வெற்றி மூலம் மிகவும் பூரித்துப்போய் இருப்பவர் கப்டன் றிக்கி பொண்டிங் தான்.


ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியிடம் அவுஸ்ரேலியா தொடரைப் பறிகொடுத்ததன் மூலம் கப்டன் றிக்கி பொண்டிங் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. கப்டன் பொறுப்பில் இருந்து பொண்டிங்கைத் தூக்க வேண்டும் என்று விமர்சனமும் எழுந்தது.

ஆனால், உலக லெவன் அணியை வீழ்த்தியதன் மூலம் அந்த விமர்சனத்திலிருந்து பொண்டிங்கின் கப்டன் பதவி தப்பியது. இதனால்தான் றிக்கி பொண்டிங் பூரிப்பில் இருக்கிறார்.

## விளையாட்டு

# இளம் வீரர்களைக் கொண்ட கூட்டணி பாகிஸ்தான், இந்தியாவிலும் சாதிக்கும்!

## நம்பிக்கை தெரிவிக்கிறார் மைக்கல் வோண்



லண்டன் —

பாகிஸ்தான், இந்திய சுற்றுப் பயணத்திலும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் இங்கிலாந்து கப்டன் மைக்கல் வோண்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்தமாதம் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட்களிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும் பங்கேற்கவுள்ளது. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு இந்திய அணியுடன் இரண்டு தொடர்களிலும் மோதவுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிநடை போட்டுவரும் இங்கிலாந்து அணி இந்த 2 தொடர்களையும் சவாலாகவே எண்ணி வருகிறது. சொந்த மண்ணில் இருவரும் ஜாம்பவான்கள் என்றாலும், இளம் வீரர்கள் சாதிப்பார்கள் என்கிறார் இங்கிலாந்து கப்டன் மைக்கல் வோண்.

கடந்த 2 ஆண்டுகளாக இங்கிலாந்து அணி எதிர்த்த அணிகளை எல்லாம் வீழ்த்தி தொடர் வெற்றிகளைப் பெற்றுவருகிறது. இது அடுத்த 2 ஆண்டுகளுக்கும் தொடரவேண்டுமென்பதே எனது விருப்பம். இளம் வீரர்களைக் கொண்ட எங்கள் கூட்டணி இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கும் என்பதால், இது எளிதில் சாத்தியமாகும்.


எங்களின் சாதனைப் பாதைகளுக்கு தனிப்பட்ட முறையில் எந்த வீரரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. அனைவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இதுவரை விளையாடிய போட்டிகளில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள முயல்கிறோம். இப்போது எங்களுக்கு 2 முக்கிய சவால்கள் காத்திருக்கின்றன. முதலில் பாகிஸ்தான் மண்ணில் தொடரை வெல்ல வேண்டும்.

அடுத்ததாக இந்திய சுற்றுப் பயணத்திலும் சாதிக்கவேண்டும். இந்த 2 பயணங்களிலும் முத் திரை பதிக்க எங்கள் கூட்டணி தயாராகிவிட்டது என்று தன்னம்பிக்கையுடன் பேசுகிறார் மைக்கல் வோண்.

# உலக செஸ் சம்பியன் போட்டி 9ஆவது சுற்றில் ஆனந்த் ட்ரோ

சான்லூயிஸ் —



உலக செஸ் போட்டியின் 9ஆவது சுற்று ஆட்டத்தை இந்திய வீரர் ஆனந்த் சமனிலைப்படுத்தினார்.

உலக செஸ் சம்பியன் போட்டி ஆஜென்ரீனாவில் உள்ள சான்லூயிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடந்த 9ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்த், பல்கேரிய வீரர் வெசெலின் தபலோவுடன் மோதினார்.

இந்த ஆட்டம் 17ஆவது காய் நகர்த்தலிலேயே சமனிலையில் முடிந்தது.

அடுத்த சுற்று ஆட்டத்தில் ஆனந்த், இங்கிலாந்து வீரர் மைக்கல் அடம்ஸுடன் மோதவுள்ளார்.

9ஆவது சுற்று ஆட்டத்தின் முடிவில் பல்கேரிய வீரர் வெசெலின் தபலோவ் 7.5 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார். ரஷ்ய வீரர் பீற்றர் சிட்லெர் 5.5 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், இந்திய வீரர் ஆனந்த், ரஷ்ய வீரர் அலெக்ஸாண்டர் மொரோவிச் தலா 5 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

# 12 ஓட்டங்களில் டெண்டுல்கர் சலஞ்சர் போட்டியில் ஆட்டமிழப்பு



மொஹாலி —

மொஹாலியில் நேற்று ஆரம்பமான சலஞ்சர் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

சலஞ்சர் கிண்ண கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் இந்திய சீனியர் அணியில் இடம்பெற்றுள்ளார். நேற்று இந்திய சீனியர் அணிக்கு எதிராக, இந்திய ஏ அணி மோதியது.

இந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் நீண்ட நாட்களுக்குப் பின்னர் பங்கேற்றார். கடந்த ஏப்ரலில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடந்த போட்டிக்குப் பின்னர், லண்டனில் டெனிஸ் எல்போ காயத்துக்காக சத்திரசிகிச்சை செய்து கொண்டார்.

இதன்பின்னர், முதல் முறையாக நேற்று போட்டியில் கலந்து கொண்ட டெண்டுல்கர் 12 ஓட்டங்களை மட்டும் எடுத்தார். நேற்று இரண்டு பவுண்டரிகளை அடித்த சச்சின், பாலாஜி வீசிய பந்தை அடிக்கமுற்பட்டபோது, விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலும் பதினான்கு நாட்டு அணிகள் உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி!



லண்டன் —

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்க மேலும் 14 அணிகள் தெரிவாகியுள்ளன.

அடுத்த ஆண்டு ஜேர்மனியில் உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டி நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளும் அணிகளின் பட்டியல் உருவாக்கப்பட்டு வருகிறது. அந்தப் பட்டியலில் முன்னாள் உலக சம்பியன் இத்தாலி, இங்கிலாந்து ஆகியவை ஏற்கனவே இடம்பிடித்துவிட்டன.

இப்போது உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு மேலும் 14 அணிகள் தங்களுடைய இடத்தை உறுதிசெய்துள்ளன. இதில் ஆபிரிக்காவைச் சேர்ந்த 4 அணிகள் தகுதி பெற்றிருக்கின்றன.


இவை இதற்கு முன்பு உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றதில்லை. அங்கோலா, கானா, டோக்கோ, ஐவரிகோஸ்ட் ஆகிய அந்த 4 அணிகளும் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு இப்போதுதான் முதல் தடவையாக தகுதிபெற்றுள்ளன.

3 தடவைகள் உலக சம்பியன் பட்டத்தை வென்ற இத்தாலி அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்லோவேனியா அணியை வென்றதன் மூலம் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற அணிகளில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 1966ஆம் ஆண்டு உலக சம்பியன் பட்டத்தை வென்ற இங்கிலாந்தும் மற்றும் போலந்து அணியும் பிரிவு 6இல் இருந்து தெரிவு பெற்றுள்ளன.

நெதர்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் செக். குடியரசு அணியை வென்றது. குரோஷியா 1-0 என்ற கோல் கணக்கில் சுவீடனை வீழ்த்தியது. பராகுவே 1-0 என்ற கோல் கணக்கில் வெனிசுலாவைத் தோற்கடித்தது. இவற்றில், வெற்றிபெற்ற அணிகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு இடம்பிடித்துவிட்டன.


தகுதிச் சுற்று ஆட்டத்தில் அமெரிக்கா தோல்வியடைந்தது. சின்னஞ்சிறு நாடான ஐவரிகோஸ்ட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஏற்கனவே ஜேர்மனி, ஜப்பான், ஈரான், தென்கொரியா, சவூதி அரேபியா, ஆஜென்ரீனா, பிறேசில், அமெரிக்கா, மெக்சிக்கோ, உக்ரைன் அணிகள் உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுவிட்டன.

ஹொஸ்வே காஸில் நடைபெறும் சுமோ மல்யுத்தப் போட்டியில் ஜப்பானின் இரு வீரர்கள் மோதும் காட்சி.



# ஜப்பான் ஓபன் ரெனிஸ் போட்டி; செக். வீராங்கனை சம்பியன்!

டோக்கியோ —



ஜப்பான் ஓபன் ரெனிஸ் தொடரில் நிக்கோல் வைடிசோவா சம்பியன் பட்டம் வென்றார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற ஜப்பான் ஓபன் ரெனிஸ் தொடர் டோக்கியோவில் நடைபெற்றது.

பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் செக். குடியரசின் நிக்கோல் வைடிசோவா, பிரான்சின் டாடியானா குளோவினை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை வைடிசோவா போராடி வென்றார்.

இரண்டாவது செட்டிலும் கடும் போட்டி நிலவியது. இதில் குளோவினுக்கு காலில் காயம் ஏற்படவே போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். இதன் மூலம் வைடிசோவா 7-6, 3-2 என்ற முன்னணியில் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தென்னாபிரிக்காவின் வேஸ்லே மோடி 1-6, 7-6, 6-4 என்ற செட்களில் குரோஷியாவின் மரியோ அன்சிக்கை வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

# வட-கிழக்கு அபிவிருத்திப் பணிகளின் முன்னெடுப்புக்கு மாவீரர்கள், பொதுமக்களின் தியாகங்களே காரணம்

## அரச அதிபர் கணேஷ்



யாழ்ப்பாணம் —

கடந்த இரண்டு தசாப்த காலமாக எமது மக்களும், போரளிகளும் செய்த தியாகங்கள்தான் உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் எமது வடக்கு - கிழக்குப் பகுதி அபிவிருத்தியில் கவனம் செலுத்த வைத்தன. இதனால்தான் இன்று இங்கு பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எனவே நாம் முதலில் தலைசாய்த்து வணங்க வேண்டியவர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்த போராளிகளும், பொதுமக்களுமே என, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேச செயலக புதிய கட்டத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

எந்தவொரு கஷ்டத்திலும் ஒரு நன்மை உண்டு என்பதைப் போல, எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவு இன்று இந்த அழகிய பிரதேச செயலகம் உருப்பெற வழிவகுத்தது. இன்றைய தினம் வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது பிரதேச செயலகக் கட்டடத்தை திறந்து வைத்த மகிழ்ச்சியில் நாம் உள்ளோம்.

கடுமையாகப் பாதிப்புற்ற இடங்களில் புனரமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் தென்மராட்சிக்கான பிரதேச செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னின்றுழைத்த வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர், கட்டடங்கள், திணைக்களப் பிரதம பொறியியலாளர், முன்னாள் அரச அதிபர், கட்டட ஒப்பந்தகாரர் ஆகியோரும் பாராட்டப்படவேண்டியவர்கள். கடும் சவால்களுக்கு மத்தியிலும் இவர்கள் முன்னின்று உழைத்துள்ளார்கள்.

இன்று மாவட்ட நிர்வாகத்தின் ஒரு கேந்திர நிலையமாக பிரதேச செயலகங்களே விளங்குகின்றன. மக்களுடைய அனைத்து பிரதான தேவைகளுக்கும் இன்று பிரதேச செயலகமே களமாக அமைகின்றது. இந்த வகையிலே கடுமையாகப் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கென இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இது என்னைப் பொறுத்த வரையில் இங்குள்ள மக்களின் தேவைகள், வசதிகள் என்பற்றுக்கான ஒரு அத்திவாரமாகவே உள்ளது. இந்த அத்திவாரத்தில் இருந்து புதியதொரு கட்டம் உதயமாக வேண்டியுள்ளது.

துன்பப்பட்ட, அனைத்தையும் இழந்த மக்களுக்கான வாழ்க்கையை தென்பகுதி மக்களது வாழ்க்கைத்தரத்துடன் ஒப்பிடக் கூடிய வகையில் உயர்த்துவதற்கு பாடுபடவேண்டும். இதற்கு இங்கு கடமையாற்றும் சகல மட்ட அலுவலர்களும் ஒரு இலட்சியத்தோடு பணியாற்ற வேண்டும். இந்த மக்களை ஒருங்கிணைத்து அரவணைத்து கிராமமட்டத்தில் இருந்து அபிவிருத்தியை முன்னெடுக்கப் பாடுபடல் வேண்டும்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். அப்படியானால் நாம் தொழில் செய்யும் இடம் ஓர் ஆலயம். ஆகவே இங்கு ஒரு தேவை கருதி வருகின்ற மக்கள் பூரண திருப்தியுடன் திரும்பிச் செல்லவேண்டும். அதற்கேற்ற வகையில் நாம் செயலாற்ற வேண்டும். வருகின்ற மக்கள் ஆத்ம திருப்தியோடு செல்ல வேண்டும்.

இன்றைய நிலையில் எந்தவொரு அரச அலுவலரும் தன்னை அலுவலராக, அதிகாரியாகக் கருதாது மக்களுக்கான தொண்டனாகக் கருதி செயற்பட வேண்டும். எனது பிரதேச செயலகப் பிரிவிலே நான் திறமையாகக் கடமையாற்றுகிறேன் என்ற இலட்சிய நோக்கோடு ஒவ்வொரு அலுவலரும் பணியாற்ற வேண்டும். அதே போல பிரதேச செயலருக்கும் ஒரு இலட்சியம் - அதாவது யாழ்.மாவட்டத்திலே சிறந்த பிரதேச செயலர் நானே என நிரூபிக்கும் இலட்சியம் இருக்கவேண்டும்.

அதே போல அரச அதிபருக்கும் இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலே எனது மாவட்டம் முன்னிலையில் திகழ்கின்றது - திகழவேண்டும் என்ற மனப்பாங்கு இருத்தல்வேண்டும். அப்போது தான் நாம் முன்னேறலாம் எனத் தெரிவித்தார். (24)

## போயா ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம் —

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அன்று பேராசிரியர் கே.சண்முகநாதனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும்.

## நாளை நடைபெறவுள்ள பிரதேச செயலக கலாசார விழா

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாண பிரதேச செயலகம் நடத்தும் யாழ்ப்பாண பிரதேச கலாசார விழா - 2005 நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பிரதேச செயலர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினர்களாக சுனாமி மீள் கட்டுமான பிரிவின் மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## வாணி விழா

யாழ்ப்பாணம் —

பலாலி ஆசிரிய கலாசாலையில் வாணி விழா நாளை கலாசாலை மண்டபத்தில் இந்துமாமன்றத் தலைவர் சுரேஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களின் பட்டிமன்றம், நாடகம் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (12)

# பொது நூலகத்துக்கு இராணுவம் நிதி அன்பளிப்பு: தமிழீழ மக்கள் அரசியல் ஏமாளிகள் அல்லர்!

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம் —

தரைப்படையின் 56 ஆவது நிறைவை முன்னிட்டு யாழ். பொது நூலகத்துக்கு இராணுவத்தினர் வழங்கிய ஒரு லட்சம் ரூபாவைக் கண்டு, கடந்தகால இன அழிப்பு நடவடிக்கைகளை மறந்துவிட தமிழ்மக்கள் என்றும் அரசியல் ஏமாளிகள் அல்ல என, தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் -

இராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன் யாழ். பொது நூலகத்துக்கு ஒரு லட்சம் ரூபா காசோலை வழங்கியதாகப் பத்திரிகைகளில் அவரது புகைப்படத்துடன் கூடிய செய்தி வெளியாகியிருந்தது. இந்தச் செய்தியைப் பிரசுரித்ததன் ஊடாக தமிழ்மக்கள் மனங்களில் மாறாத வடுவாகப் பதியப்பட்டுள்ள இலங்கை அரசினதும் இராணுவத்தினதும் சிங்களக் காடையர்களினதும் திட்டமிட்ட வகையில் தமிழ்மக்களின் கல்விப் பொக்கிஷமாக இருந்த எத்தனையோ ஆயிரம் கோடி பெறுமதி மிக்க நூல்நிலைய எரிப்பை மறந்துவிடச் செய்துவிட முடியாது.

எமது சொத்தை எரித்து நாசம் செய்து, எமது மக்களை அறிவிலிகளாக்கலாம் என சிங்கள அரசும் படைகளும் எண்ணியது உண்மைதான். இருந்தும் அதை அவர்களால் சாதித்துவிடமுடியவில்லை.

அவ்வாறு அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு தமிழ் மக்கள் அன்று தொடக்கம் முட்டாள் ஆக்கப்பட்டிருந்தால், இன்று சுனில் தென்னக்கோன் வழங்கிய ஒரு லட்சம் ரூபாவைப் பார்த்து ஆகா ஓகோ என்று அங்கலாய்த்திருக்கக்கூடும்.

ஆனால், தமிழ்மக்களின் நிலை அவர்கள் கருதியதற்கு முற்று முழுதாக வேறுபட்டதாகவே இருக்கிறது.

யாழ்.குடாநாட்டில் மக்கள் எதைச் சாதிக்கக்கூடாது என்று நினைத்தார்களோ, அதையெல்லாம் இன்று சாதித்து முடித்துவிட்டு தமது விடுதலைப் பாதையில் அனைவரும் ஒரு தலைமையின் கீழ் அணிதிரண்டு போரிலும் சரி, கல்வியிலும் சரி, மனித நேயம், மனித உரிமை, ஜனநாயகப் பண்புகளிலும் சரி இலங்கை அரசாங்கத்தையே விஞ்சியவர்களாகவே தமிழ்மக்கள் இன்று உள்ளனர். எனவே இந்த ஒரு லட்சம் ரூபாவைக் கண்டு கடந்தகால இன அழிப்பு நடவடிக்கைகளை மறந்துவிட தமிழ் மக்கள் ஒன்றும் அரசியல் ஏமாளிகள் அல்ல என்பதை சிங்கள அரசுக்கும் சிங்களப் படைத் தலைமைக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இன்றும் எமது மக்களின் வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டிடங்களை உயர்பாது காப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து வைத்திருக்க கட்டளை பிறப்பிக்கின்ற - எமது மக்களின் நிம்மதியற்ற அவல வாழ்வுக்கு காரணமாக இங்கு இருக்கின்ற படைகளின் தளபதியாக இருக்கின்ற, எமது மக்கள் பல லட்சக்கணக்கில் ஒன்றுகூடி இங்கிருந்து வெளியேறுங்கள் என பல தடவை கூறியபோதும், கேட்க மறுக்கின்ற, இராணுவத் தலைமை எதற்காக இன்று ஒரு லட்சம் ரூபாவை எமக்கு வழங்குகிறது என்பது நன்றாகவே தெரியும்.

எனவே, இராணுவத்தினர் இனியாவது இந்த ஏமாற்று வித்தைகளைக் கைவிட்டு, எமது மக்களின் நிம்மதியாக வாழ்வுக்கு வழிவிடுவதே சிறந்ததாக இருக்கும் என தமிழ்மக்கள் சார்பாகக் கூறிவைக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




நெதர்லாந்து அரசாங்கத்தால் யாழ். மாநகரசபைக்கு இரண்டு உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. இதில் நெதர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் ஆர்.எஸ்.வான்டிக் உழவு இயந்திர சாவியை யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானத்திடம் கையளிப்பதைக் காணலாம்.

## சாரணர் பாசறை விழா

காங்கேசன்துறை —

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 25 ஆவது வெள்ளிவிழாவும், மாவட்ட சாரணர் பாசறை விழாவும் குருளை சாரணர் வெளிக்கள விழாவும் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. குருளை சாரணர் வெளிக்கள நாள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

தீப்பாசறை, குழுப்பதிவேடு, சமூகசேவை, மைதானக் காட்சி, அணிநடை என பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. பார்வையாளர்கள் ஞாயிறு மாலை 2 மணி முதல் 6 மணிவரை பார்வையிடலாம் என மாவட்ட சாரணர் ஆணையாளர் சிவபாதரத்தினம் தெரிவித்தார். (72)

'இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்,
மனித வளத்தை மேம்படுத்துவோம்' REERDO

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஒன்று




பெயர் : ச.டிலக்ஷன்
முகவரி : கோட்டைக்கட்டியகுளம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



தொண்டமனாறு சந்நிதியான் ஆசிரமத்தில் மயில்வாகன சுவாமிகளின் 20 ஆவது ஆண்டு குருபூசை தினத்தை முன்னிட்டு நலன்புரி நிலையத்தில் வாழும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட யுவதி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (14)




# கர்ப்ப கால கோளாறுகளால் பக்கவாத ஆபத்து...!

## நிபுணர்கள் எச்சரிக்கை



கர்ப்ப காலத்தில் ஏற்படும் சிக்கல்கள் பிற்பாடு பக்கவாதம் ஏற்படக்கூடிய ஆபத்தை அதிகரிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர்.

கர்ப்பிணிகளை பாதிக்கும் பிலிஎக்லம்சியா (Preeclm psia) வை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பின்னாளில் (சராசரியாக 13.5வருடம்) பக்கவாத நோய் வருவதற்கு 2 மடங்கு கூடுதல் வாய்ப்பு உள்ளது. பிரிஎக்லம்சியா என்றால் என்ன...?

கர்ப்ப காலத்தில் ரத்த அழுத்தம் அளவுக்கு அதிகமாக இருப்பதற்கு பெயர்தான் பிரி-எக்லம்சியா இதனால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கை-கால்களில் நீர் கோர்த்துக் கொண்டு வீங்கி காணப்படும். சிறுநீரில் புரோட்டீன் கலந்து வெளியேறும். ரத்த அழுத்தம் கூடுதலாக இருக்கும். இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால், இந்த 3 அறிகுறிகளும் ஒரே சமயத்தில் தென்படும். (இந்தநிலை தொடர்ந்தால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும் வாய்ப்பு கூட உள்ளது)

இதனால் பிளசண்டாவுக்கு ரத்தம் கிடைப்பது தடுக்கப்படுகிறது. விளைவு, கருப்பையில் உள்ள குழந்தை சின்னதாகி விடும். குறைப் பிரசவத்தில் குழந்தை பிறக்க இதுதான் முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகள் உயிருக்கு எந்தநேரமும் ஆபத்து உண்டு)

அடுத்து பிரசவத்தின் போது அளவுக்கு அதிகமாக ரத்தம் வெளியேறினால், பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பு 10 மடங்கு கூடுகிறது. எனினும் இது மிகவும் அரிதான விடயம்தான்.

# சொனிக்கு எமி விருது



புதிய தொழிநுட்ப உத்திகள் மற்றும் முப்பரிமாண(3D) தொலைக் காட்சி விளையாட்டுக்களை அறிமுகம் செய்தமைக்காக சொனி நிறுவனம் கலை மற்றும் விஞ்ஞானத்துக்கான அமெரிக்க தேசிய அக்கடமி விருதான எமி (Emmy) விருதை வென்றுள்ளது.

மைக்ரோ சொப்ட் நிறுவனத்துடன் கடும் போட்டியிட்டு சொனி முப்பரிமாண ரி.வி.விளையாட்டுக்களை அறிமுகம் செய்து வெற்றி கண்டுள்ளது.

# மூன்றாம் உலக நாடுகளை கவரும் தொலைடபேசிகள்


செல்லிடத் தொலைபேசி உற்பத்தியாளர்கள் தற்போது தமது கவனத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பக்கமே திருப்பியுள்ளனர். கல்வியறிவு குறைந்த பிரதேசங்களில் கூட இப்போது இந்தத் தொலைபேசிப் பாவனை அதிகரித்துள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



நோக்கியா, மோட்ரொல்லா, சாம்சங், சீமன்ஸ், எல்.ஜி,சொனி எரிக்ஷன் போன்ற நிறுவனங்களே தம் உற்பத்திகளால் இந்தப் பகுதி மக்களிடையே பிரபலமாகி வருகின்றன. கமரா பொருத்தப்பட்ட தொலைபேசிகள் பிரபலமாகி வரும் நிலையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கக்கூடிய தொலைபேசிகளை அறிமுகம் செய்தால், தமது காட்டில் நல்ல மழை பெய்யும் என இந்த நிறுவனங்கள் இலக்கு வைத்துள்ளனவாம்.

# பாதுகாப்பான காலணி

கண்ணிவெடிகள் மிகவும் ஆபத்தானவை. உலகில் 22 நிமிடத்துக்கு ஒரு முறை, ஏதாவது ஒரு பகுதியில் ,ஒருவர் வீதம் கண்ணிவெடிக்கு உயிரிழப்பதாகப் புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இதனால் ஆப்கானிஸ்தான், கம்போடியா, முன்னாள் யூகோஸ்லோவியா, அங்கோலா, மொசாம்பிக் உட்பட பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தான் வசித்து வருகிறார்கள்.



இந்தநிலையில் கண்ணிவெடியில் இருந்து உயிரைக்காக்கும் 6 கால்கள் கொண்ட நவீன சப்பாத்து சிங்கப்பூரில் உள்ள நான்யாங் டெக்னாலஜிக்கல் பல்கலைக் கழகம் உருவாக்கி உள்ளது. இந்தக் கருவியை காலணியோடு சேர்த்து பொருத்திக் கொள்ளவேண்டும். இது இருக்கும் ஒவ்வொரு காலிலு கண்ணிவெடியை கண்டுபிடிக்கும் உணர்வுக்கருவிகள் இணைக்கப்பட்டு இருப்பதால், கண்ணிவெடியை கண்டுபிடித்து எச்சரிக்கை விடுக்கும். இதன் மூலம் உயிரையும், கால்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

தற்போது இந்த புதிய சப்பாத்துக்குக் காப்புரிமை கோரி விண்ணப்பித்துள் ளனர்.

# புகைப்பிடித்தலும் சொக்லேட்டும்



புகைபிடிப்பதால் ரத்தக் குழாய்களின் சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்படுகிறது. இதற்கு எண்டோத்தீலியல் டிஸ்பங்ஷன் (endothelial dysfunction) என்று பெயர். இதனால் ரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாற்றத்துக்குத் தகுந்தாற்போல செயற்படும் தன்மையை ரத்தக் குழாய்கள் இழந்து விடுகின்றன. விளைவு, ரத்த நாளங்கள் கடினமாகி (atherosclerosis) மாரடைப்பு அல்லது பக்கவாதம் உண்டாகும்.

இந்தநிலையில் புகைப்பிடிப்பவர்களின் ரத்த நாளங்கள் பாதிக்கப்படுவதை சொக்லேட் தடுத்து நிறுத்தும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அதற்காக சொக்லேட் சாப்பிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் இது ஒரு தற்காலிக தீர்வு மட்டுமே. சொக்லேட்டிலுள்ள பிளேவ்னால் (flavonol) என்ற நோய் எதிர்ப்பு பொருள் எண்டோத்தீலியல் டிஸ்பங்ஷனை தற்காலிகமாக சரிசெய்கிறது.

வழக்கமாக கடைகளில் விற்கப்படும் கொக்கோ பானங்களில் பிளேவ்னால் குறைவாகவே காணப்படும். ஆனால் இந்த விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வினால் பிளேவ்னால் கூடுதலான கொக்கோ பானம் பயன்படுத்தப்பட்டது. அதேசமயம் சூடான கொக்கோ பானத்தால் எந்த நன்மையும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

சொக்லேட்மூலம் புகைபிடிப்பவர்களுக்கு நீண்டகால நன்மைகள் ஏதாவது உண்டா? என்பதைக் கண்டறிய தொடர்ந்து ஆய்வுகள் நடந்துவருகின்றன.

# புராதன சிலந்தி மீட்பு




மரப்பிசினுள் சிக்கி, புதைபொருள் வடிவாகக் காணப்பட்ட புராதன சிலந்தி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இதை ஆராய்ந்ததில், இதன் வயது 20 மில்லியன் வருடங்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. 4Cm நீளமான இந்தச்சிலந்தி டொமினிக்கன் குடியரசு அருங்காட்சியகத்தில் தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட் டது.

இந்தச் சிலந்தியின் இரத்தத்தின் டி.என்.ஏயை பரிசோதிப்பதன் மூலம் எவ்வாறு, எப்போது, எங்கே இந்த சிலந்தி இறந்தது என்பதை கண்டறிய முடியும் என தெரியவரும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். Filistatidae குடும்பத்தைச் சேர்ந்த இந்த புதிய இனச் சிலந்தி பொதுவாக தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் காணப்படுகின்றன. 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தச் சிலந்தி மரத்தில் ஏறியபோது அதில் வழிந்திருந்த பிசினில் சிக்கி அப்படியே ஒட்டுப்பட்டு போயிருக்கலாம் என நம்பப்படுகிறது. கால் முறிந்த நிலையில் இந்தச் சிலந்தி காணப்படுகிறதாம்.

# கருவியை உபயோகிக்கும் கொரில்லாக்கள்

காட்டில் கொரில்லாக்கள் எனப்படும் மனிதக்குரங்குகள் தமது சில வேலைகளுக்காக எளிய கருவிகளை (Simple tools) உபயோகிப்பது நேரடியாக அவதானிக்கப்பட்டுள்ளது.



ஆபிரிக்காவின் கொங்கோ காட்டினுள் சேற்றுமண் நிறைந்த அருவிகளை கடக்க முன்னர் கொரில்லாக்கள் ஒரு தடி கொண்டு நீரின் ஆழம், கீழ் மண்ணின் தன்மை என்பவற்றை குற்றி குற்றிப் பரிசோதித்த பின்பே மெல்ல மெல்ல ஆற்றை கடப்பது வீடியோ படமாக்கப்பட்டுள்ளது. இதே போன்று சிம்பன்ஸிகள், ஊராங் ஊடாங் குரங்குகளும் கருவிகளின் உதவியுடன் சில கருமங்களை செய்கின்றன.

இது வாலில்லாக் குரங்குகளுக்கும், (Apes) மனிதனுக்கும் இடையிலான கூர்ப்பு பரிணாமத்தைப் புலப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.



வாலில்லாக் குரங்களில் சிம்பன்ஸி தனது உணவுத் தேவைக்காக கற்களைக் கொண்டு அவற்றை உடைக்கவோ நசிக்கவோ முயலும்.

இவற்றின் முன்னோர் உறவினரான பபூன் குரங்குகள் தடிகளை சப்பி, தூரிகைகளாக மாற்றி அவற்றைக் கொண்டு திரவங்களை கரைக்கும். ஆசியாவின் வாலில்லாக் குரங்கான ஊராங் ஊட்டாங் கிளைகளை தடிகளாகக் கொண்டு தமது உணவுகளை தட்டி எடுக்கின்றன.

இலைகளை சுருட்டி வாயில் வைத்து பல்வேறுபட்ட ஒலிகளை காட்டில் எழுப்பி சமிக்ஞை செய்கின்றன.

இதன் தொடர்ச்சியாக தற்போது கொரில்லாக்களும் தடியைக்கொண்டு, தமது பாதையின் தன்மையைக் கண்டறிவது தெரியவந்துள்ளது.

# பருமனைக்குறைக்கும் நவீன கருவி

உடற் பருமனைக் குறைக்க உடற்பயிற்சி செய்யவேண்டும். அல்லது உணவுக்கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். சில சமயம் இரண்டையும் சேர்த்துச் செய்யவேண்டும் என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள். இதுதவிர பிரத்தியேக அறுவைச் சிகிச்சை மூலம் பருமனைக் குறைக்கும் சிகிச்சையும் தற்போது வந்துள்ளது. ஆனால் இது எதுவுமே வேண்டாம். கொழுப்பைக் குறைக்கலாம் என்று லண்டன் மருத்துவ நிபுணர் கிறிஸ் இங்க்லேபீல்டு கூறியுள்ளார்.



இவரது புதிய சிகிச்சையில் சத்திரசிகிச்சை ரூம் இல்லை. வலி இல்லை. மருந்து - மாத்திரை, பத்தியம் எதுவுமே இல்லை. அதற்குப் பதில் ஒரு நவீன இயந்திரத்தைப் பயன்படுத்துகிறார். உடலில் வேண்டாத கொழுப்பு தேங்கிக் கிடக்கும் இடத்தின்மீது இந்தக் கருவி உயர் அதிர்வலை எண்ணுடைய அல்ட்ரா சவுண்ட் அலைகள் பாய்ச்சும். இதன்மூலம் அருகிலுள்ள ரத்த நாளங்கள், தோல், தசை, எலும்பு மற்றும் நரம்புகளுக்கு எந்தவிதமான சேதாரமும் இல்லாமல், கொழுப்பு செல்கள் உடைக்கப்படும்.

பின்னர் இப்படி உடைக்கப்பட்ட கொழுப்புச் செல்களை நோயாளியின் வெள்ளை இரத்த செல்கள் ஈர்த்து, பின்னர் உடம்பினால் எரிக்கப்படுகின்றன.

இவர் இந்த நவீன கருவியைப் பயன்படுத்தி இதுவரை 20 நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துள்ளார். சிகிச்சைக்கு வெறும் 2 மணி நேரம் மட்டுமே தேவைப்பட்டது. சிகிச்சைக்கான செலவு 800 பவுண் மட்டுமே.

இந்தக் கருவி அடுத்தடுத்த ஆய்வுகளுக்குப்பின் வெகு சீக்கிரத்தில் புழக்கத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குறட்டையால் பாதிப்பு




குறட்டைச் சத்தத்தால் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுவதாகவும், கடைசியில் இறப்பில் போய் முடிகிறது என்றும் இங்கிலாந்தில் நடத்தப்பட்டுள்ள கருத்துக் கணிப்பீட்டிலும் தெரியவந்துள்ளது.

குறட்டைவிடும் பழக்கம் மணமான தம்பதிகளிடையே எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டறிய, இங்கிலாந்தில் ஒரு கணிப்பீடு நடத்தப்பட்டது. குறட்டைவிடும் பழக்கமுள்ள 1000 தம்பதிகளிடம் அவர்களது அனுபவம் பற்றிக் கருத்துக் கேட்கப்பட்டது.

குறட்டைச் சத்தத்தை சினையான காண்டாமிருகம், எக்ஸ்பிரஸ் ரெயில், மரம் அறுக்கும் மில் ஆகியவற்றின் சத்தத்துக்கு அவர்கள் ஒப்பிட்டனர். 1000 தம்பதிகளில் பாதிப்பேர் தங்களிடையே சண்டைக்குக் காரணமே குறட்டைச் சத்தந்தான் என்று கூறினார்கள். குறட்டைச் சத்தத்துக்குப் பயந்து இரவில் வீட்டைவிட்டு எங்காவது ஓடிவிடலாம் எனத் தோன்றுவதாக 10 சதவீதப்பேர் தெரிவித்தனர்.

# துணை தேடி நீண்ட தூரம் பயணிக்கும் வெள்ளை சுறா

தனது துணையைத் தேடி இனம் பெருக்கும் நோக்கோடு, இந்தியப் பெருங்கடலைக் கடந்து செல்லும் பாரிய வெள்ளையினச் சுறா (Great white shark) ஒன்பது மாதங்களில் மீண்டும் தனது பழைய இடத்துக்கு திரும்பிவிடுவதாக இவை பற்றி ஆராய்ந்த ஆய்வுக்குழு ஒன்று கண்டறிந்துள்ளது.



தென் ஆபிரிக்கா கடலில் இருந்து, இந்து சமுத்திரத்தைக் கடந்து, அவுஸ்ரேலியாவரை இவை பயணிக்கின்றன. ரியூனா மீனுக்கு அடுத்தபடியாக இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட பாதையில் இனம் பெருக்க சென்றுவருவது இந்த வெள்ளையின சுறாக்களே எனக் கூறப்படுகிறது. ஆய்வாளர்கள் பெண் வெள்ளைச் சுறாவின் பின் துடுப்பில் வழியறி கருவியை பொருத்தி, இந்த மீனினங்கள் செல்லும் பாதையை பின் தொடர்ந்து கண்டறிந்துள்ளனர். இத்தகைய இடப் பெயர்வின்போது சில சுறாக்கள் இடையில் மீனவர்களிடம் அகப்பட்டு மரணமடைவதும் உண்டு.

# டை கட்டினால் சிக்கல்



டைகட்டினால்தான் தோற்றத்துக்கு மெருகு கூடும் என்று அதிகார பதவியில் உள்ளவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் டையை இறுக்கமாக அணிந்து கொண்டால் ஒரு கட்டத்தில் அது கண் பார்வையைப் பறித்துவிடலாம் என்று எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார்கள் நியுயோர்க் ஐ அன்ட் இயர் இன்ஃபர்மரி ஆராய்ச்சியாளர்கள்.

அதாவது - தலையிலிருந்து இதயத்துக்கு ரத்தத்தைச் சுமந்துசெல்கிற ரத்த நாளம் இறுக்கப்படுவதால், கண்ணின் கோள திரவம் அதிகமாக அழுத்தப்படுகிறதாம். இதனால் கிளைக்கோமா என்ற பிரச்சினை ஏற்படுகிறதாம். கிளைக்கோமா வந்தால் கண்பார்வை குன்றி ஆகி விடும். எனவே 'டை' கட்டுபவர்களே இன்று முதல் 'டை'யை தளர்வாகக் கட்டுங்கள்.

# நீண்ட நேரம் பல் தேய்த்தால்




பற்கள் பளிச்சிட நீண்டநேரம் அழுத்தி பிரஷ்சைத் தேய்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது தவறு என்று பல மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நியூகேசில்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இந்த உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர். நீண்டநேரம் மிக அழுத்தமாக பிரஷினால் பல் துலக்கினால் பல்லுக்கு பாதுகாப்புக் கவசம் போன்ற எனாமலும், ஈறும் நிரந்தரமாக சேதமடைந்து விழுகிறதாம். பல் துலக்க 2 நிமிடம் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். 150 கிராம் எடையுள்ள அழுத்தத்தைத்தான் பிரஷுக்குக் கொடுக்கவேண்டும் என்று நிபுணர்கள் ஆலோசனையும் கூறியிருக்கிறார்கள். 30 வினாடியில் இருந்து 3 நிமிடம் வரை 75 கிராமில் இருந்து 300 கிராம் வரையிலான அழுத்தத்துடன் 16 வகையில் பல்துலக்கி இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

# பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை மாலதி தமிழீழ பெண்களுக்கு உணர்த்தியுள்ளார்

## தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்



கிளிநொச்சி—

தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனையுடன் விடுதலைப் போராட்டத்தில் உள்வாங்கப்பட்ட பெண்கள்- இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் பல சாதனைகளையும், தியாகங்களையும் புரிந்துள்ளனர் எனத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி - இரணைமடு சந்தியில் நேற்று நடைபெற்ற 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு மற்றும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களை இணைக்கும்பணி 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பெண்களை விடுதலைப்போராட்டத்தில் இணைப்பதில் ஆரம்பகால கட்டங்களில் பெரும் நெருக்கடிகள் இருந்தன.

பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் சாதனைகள் புரிவார்களா என்ற நம்பிக்கையீனங்கள் எல்லோர் மத்தியிலும் இருந்தன.

எல்லாவற்றையும் தீர்க்கதரிசனத்துடன் சிந்திக்கும் எமது தலைவர் - விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பரியதாக இருக்குமென நம்பினார்.

விடுதலைப் போராட்டத்தில் இணைக்கப்பட்ட பெண்களுக்கான முதலாவது பயிற்சி இந்தியாவில் வழங்கப்பட்டது.

பயிற்சியை முடித்த பெண்களுக்கான முதலாவது போர்க்களம் மன்னாரில் நிகழ்ந்தது.

பின்னர் யாழ். கோட்டை முற்றுகையில் பெண்கள் பங்கெடுத்தனர். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்தியப் படை எமது மண்ணில் அமைதிப்படை என்று கால்பதித்து, தமிர்களுக்கெதிரான போரை தொடங்கிய வேளை - தமிழீழப் பெண்களுக்கு விழிப்பை மாலதி ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளார்.

தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனையுடன் விடுதலைப்போராட்டத்தில் உள்வாங்கப்பட்ட பெண்கள், இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் பல சாதனைகளையும், தியாகங்களையும் புரிந்து, விடுதலைப்போராட்டத்தில் பல படையணிகளாக வளர்ந்துள்ளார்கள்.

பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்பதை மாலதி தமிழீழ பெண்களுக்கு உணர்த்திச் சென்றுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி பிரதேச பொறுப்பாளர் போர்ப்பிரியன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாலதியின் உருவச்சிலைக்கான மலர்மாலையை மதி"யரையகப் பொறுப்பாளர் திலக் அணிவித்தார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் நினைவுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கரைச்சி பிரதேச செயலர் க.சுலோஜினி, கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர்.

# சிறப்புற நடைபெற்ற கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா



கிளிநொச்சி—

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆதவன் சிறுவர் முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மதியம் 1.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்களவிளக்கினை கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ரி.சத்தியமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்று பணிப்பாளர் றீகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சிவநாத் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, ஆதவன் முன்பள்ளிக் கொடி என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# ஆசிரியர்களுக்கான அறிமுக செயலமர்வு

ஆழியவளை—

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான யுனிசெப் ஆதரவுடனான இழந்த கல்வியை ஈடு செய்தல் செயற்திட்ட அமுலாக்கம் சம்பந்தமான அறிமுகச் செயலமர்வு, இன்று புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா அதிவித்துள்ளார். (122)

# வவுனியா பிரதேச சபைக் கட்டடத்தில் இராணுவம்; அரச அதிபரிடம் முறைப்பாடு!

வவுனியா—

ஓமந்தை, செட்டிகுளம், பேயாடி கூழாங்குளம், பம்பைமடு, எல்லப்பர், மருதங்குளம் போன்ற இடங்களில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்து நிலை கொண்டுள்ளனர் என்று, வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாகப் பொது இடங்கள் - அரச கட்டடத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியிருக்க வேண்டிய நிலையிலும், இதுவரை அவர்கள் வெளியேறவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டு இருப்பதன் காரணமாக, இந்தக் காரியாலயங்கள் தனியார் வீடுகளில் அதிகளவு வாடகை கொடுத்து இயங்கி வருகின்றன.

இதனால் காரியாலயங்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர்-11

1737: இந்தியாவில் கல்கத்தா நகரில் கடும் சூறாவளியும், நில நடுக்கமும் ஏற்பட்டது. இதில் ஏறக்குறைய மூன்று லட்சம் பேர் உயிரிழந்தனர்.

1911: பாரதியின் நூல்களைப் பறிமுதல் செய்யும் படியான ஆங்கில அரசின் ஆணை,சென்னை அரசினால் பிறப்பிக்கப்பட்டது.

1918: வேலை நிறுத்தத்திற்கும், கதவடைப்பிற்கும் கனடா அரசாங்கம் தடை விதித்தது.

1919: விமானப் பயணத்தின் போது உணவு பரிமாறும் முறை முதன் முதலாக லண்டன்- பாரிஸ் விமானப் பயணத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

1923: ஜேர்மனியின் நாணயமான மார்க்கின் மதிப்பு பணவீக்க நிலை காரணமாக வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. நாணயமாற்று வீதம் ஒரு ஸ்ரேலிங்பவுணுக்கு ஆயிரம் கோடி மார்க் என்ற நிலைக்கு வந்து சேர்ந்தது. தெருக்களில் மார்க் நோட்டுக்களை குழந்தைகள் கால்களால் அடித்து விளையாடினார்கள்.

1932: தொலைக்காட்சி மூலம் அரசியல்கட்சிகள் தேர்தல் பிரசாரம் செய்யும் முறை ஆரம்பமாகியது. லண்டனில் ஜனநாயகக் கட்சி முதன் முதலாக இத்தகைய நிகழ்ச்சியை ஆரம்பித்தது.

1936: பிலிப்பைன்சின் மணிவாவில் அடித்த கடுமையான புயலினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின.

1958: அமெரிக்கா நிலாவை நோக்கி பயனீர்–1 என்ற விண்ணூர்தியை அனுப்பியது. இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

1962: இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையே எல்லையில் மோதல் ஏற்பட்டது.

1969: சோவியத்ரஷ்யா இரு விண்வெளி வீரர்களுடன் சோயுஸ்–6 என்ற விண்கலத்தை விண்வெளி நோக்கி ஏவியது.

1971: இந்த வருடம் ஏப்ரல் 19ஆம் திகதி ரஷ்யாவில் ஏவப்பட்ட உலகின் முதலாவது விண்வெளி நிலையமான சல்யூட்–1 என்ற விண்வெளி நிலையம் பூமிக்குத் திரும்பியது. சோயுஸ்– 11 என்ற விண் கலத்தில் சென்று 21 நாள்கள் வரை இதில் தங்கியிருந்த மூன்று விண்வெளி வீரர்களும் ஏதோ காரணத்தால் இறந்து கிடந்தனர்.

1972: இராணுவத்தின் பலவந்தம் காரணமாக, மடகாஸ்கர் ஜனாதிபதி ரானாணா பதவி விலகினார்.

1976: இந்தியாவின் மும்பாயிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட விமானம் நடுவானில் எரிந்து வீழ்ந்து சிதறியது. 95 பேர் பலியானார்கள்.

1976: சீனாவில் மாஸேதுங்கினுடைய நெருங்கிய தோழர்களான “நால்வர் குழு” என்றழைக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் ஒருவர் மாஸேதுங்கினுடைய மனைவியானார்.

1979: கியூபாவை மிகுந்த கவனத்துடன் கண்காணிக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டர் உத்தரவிட்டார்.

1982: 1545 ஆம் ஆண்டு சோலண்ட் என்னுமிடத்தில் மூழ்கிய பிரிட்டிஸ் மன்னர் எட்டாம் ஹென்றியின் போர்க்கப்பல் கடலில் இருந்து மீட்டெடுக்கப்பட்டது.

1992: சீனாவில் வர்த்தகம் புரிய அமெரிக்காவுக்கு சீன அரசு அனுமதியளித்தது.

2000: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

☆ இலங்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடித்தது.

தொகுப்பு- சந்துரு

# கிளிநொச்சி நகர்ப்புறங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு





கிளிநொச்சி—

சூழல் நல்லாட்சி ஆணையகத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு தின நிகழ்வுகளில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அந்தந்த மாவட்டங்களில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை இடம்பெற்ற இந்தச் சூழல் பாதுகாப்பு நிகழ்வில், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரிவு சார்ந்த பணிப்பாளர்கள், பணியாளர்கள், தொண்டர்களெனப் பெரும்பாலானோர் கலந்துகொண்டு- பொது வைத்தியசாலைகள், மற்றும் ஏனைய பொது இடங்கள், பிரதான போக்குவரத்து வீதியோரங்கள் பாடசாலைகள் போன்ற இடங்களில் சுற்றுப்புறச் சூழல்களைத் துப்புரவுசெய்யும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.

குறிப்பாக, கிளிநொச்சியின் நகர்ப்புறமான காக்காகடைச் சந்தியிலிருந்து, கரடிப்போக்குச் சந்திவரை வீதியோரங்கள், மக்கள் வாழும் உட்புறங்களையண்டிய சிறுவீதிகள், குடியிருப்புகள் மற்றும் ஏனைய சுற்றாடல்கள் என்பவற்றில் குழுக்கள் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு சுற்றுப்புறச் சூழல்களைத் துப்புரவுசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

வாழ்க்கையின் மிகப் பெரிய சோகம் என்பது
இழப்புகள் அல்ல;
துரதிஷ்டங்கள் அல்ல,
அச்சங்களே. - ஆதர் பென்ஸன் -

# நமது நோக்கு

## அச்சத்துள் மக்கள்; அவலத்துள் சமாதானம்!

இன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளும், வன்முறைகள் பல்கிப பெருகும், அச்சமும் பீதியும் நிறைந்த பிரதேசங்களாகவே உள்ளன.

கோஷ்டி மோதல்கள், குழு வன்முறைகள், பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான குற்றச்செயல்கள், படுகொலைகள், அரசியல் பழிவாங்கல் வன்செயல்கள், ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள், துணைப்படைக் குழுக்களின் அட்டகாசங்கள், கலாசாரத்தைச் சீரழிக்கும் இளைஞர்களின் கட்டுப்பாடற்ற செயற்பாடுகள், சமூக விரோத நடவடிக்கைகள், வழப்பறிக் கொள்ளை... என மனித வாழ்வின் இயல்பை சிதைத்தழிக்கும் நிகழ்வுகளே, இன்றைய மேற்குறித்த பகுதிகளில் இருந்து உலகிற்கு கிடைக்கும் பிரதான செய்திகளாகியுள்ளன.

ஒழுக்கம், சமூகக் கட்டுப்பாடு, பாரம்பரிய கலாசார மேன்மை, பண்பாட்டு விழுமியங்கள் மீதான பற்று, ஆன்மீக உணர்வு, கல்வியின் மீதான பற்றார்வம் என உன்னத வாழவியல் மரபுகளைத் தமது அமைதியான வாழ்வின் இலக்குகளாகக் கொண்டுவாழ்ந்த மக்களின் - தமிழ் பேசும் மக்களின்- வாழ்விடப் பிரதேசங்களில் இப்படியான சம்பவங்கள் தொடராக நிகழ்வதற்குரிய காரணங்கள் எவையென்பது குறித்து ஆய்வுசெய்து கண்டுபிடிக்க எதுவுமேயில்லை.

எல்லாமே வெளிப்படையானதும், தமிழ் மக்களின் இயல்புகளும், தேசிய மரபுசார் சமூகப்பண்பாட்டிற்கும் எதிரானதுமான, அவர்கள் மீது திணிக்கப்பட்ட காரணிகள்தான் என்பதில் ஐயமில்லை.

அந்தக் காரணிகள் எம்மக்களுக்கு அந்நியமானவை, அந்நிய சக்திகளால் உருவாக்கப்படுபவை என்பதும் நிஜமே... இந்தச சக்திகளின் உள்நோக்கமும் மிகத்தெளிவான ஒன்றேயாகும்.

அதாவது - தாயக விடுதலைக்காகவும், தங்களது சுதந்திரத்திற்காகவும் பேரெழுச்சி கொண்டு, அரச பயங்கரவாதத்திற்கும், மேலாதிக்க சக்திகளின் ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் தமிழ் மக்களிடையே குழபபத்தையும், பீதியையும் உண்டுபண்ணி, முரண்பாடுகளைத் தோற்றுவித்து அவர்களை மந்த புத்தியுள்ளவர்களாக்கி, அவர்களின் போர்க் குணாம்சத்தை சிதைப்பதன் மூலம் - விடுதலைப்போராட்டத்தை அழிப்பதே அந்தச் சக்திகளின் இலக்காகும்.

யாழ்.குடாநாடு அரச கட்டுப்பாட்டின் கீழ் வந்தபின்னர் ஆரம்பிக்கப்பட்ட, இந்த உளவியல் நடவடிக்கையின் திட்டமிட்ட வகையிலான செயற்பாடுகளின் விளைவையே, 1995 இறகுப் பினனரான ஏழாண்டுகாலப்பகுதிக்குப் பின்னர் - இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதே நோக்கர்களின் கருத்தாகவும் உள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலான சமாதான காலபபகுதி போர்க்களத்திற்கு ஓய்வுகொடுத்ததே தவிர, அரசு மேற்கொண்டுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான உளவியல் யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தவே செய்துள்ளது.

இன்று அரச கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்கின் தமிழர் தாயகப் பகுதிகளில் தொடரும் அச்சமூட்டும் வன்முறைச் சம்பவங்களுக்கு அடிப்படைக் காரணம் இந்த நிழல் யுத்தச் செயற்பாடுகளேயாகும்.

கிழக்கில் மையங்கொண்டு ஆரம்பமான, தமிழ்மக்களுக்கு எதிரான இந்த நிழல் யுத்தத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது பல தடவைகள் வெளிப்படையாக, பகிரங்கமாக, ஆதாரபூர்வமாகக் கூறப்பட்டபோதும் அரச தரப்பு அதனைப் பகிரங்கமாக நிராகரித்துள்ளமைக்குக் காரணமும் தெரிந்த விடயமே!

அரச படையினரும், அவர்களின் ஆதரவு மற்றும் வழிகாட்டலில் இயங்கிவரும் ஆயுதக் குழுக்களுமே இந்த நிழல் யுத்தத்தைத் தொடக்கிவைத்தவர்களாவர்.

அவர்களின் இச் செயற்பாடுகளின் இலக்குகள் இரண்டாகும்.

ஒன்று - தமிழ்மக்களிடையே குழப்பத்தையும், பீதியையும், முரண்பாடுகளையும் நிரந்தரமாக்குவது.

இரண்டாவது - சகல வன்முறைச் சம்பவங்களுக்கான பழியையும் விடுதலைப் புலிகள்மீது சுமத்தி அவர்களை பயங்கரவாதிகளாகக் காட்டமுனைவது.

இதனை இந்த வன்முறைகள்மூலம், அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் செய்துவருகிறார்கள் என்பது மனித உரிமைகள் பற்றி பேசும் சர்வதேச அமைப்புகளுக்கும் ஓரளவு நன்கு தெரியும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் ஆகியோரும் இதனைத் தெரிந்தே உள்ளனர்.

ஆனால், அரசாங்கத்துடன் முரண்பட விரும்பாததாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர்கள் இது குறித்து இறுக்கமான நடவடிக்கைகள் எதனையும் செய்யாதுள்ளனர்.

இது ஒட்டுமொத்தமாக சமாதான முயற்சிகளையே பாதிக்கும் என்பதைக் கூறவேண்டிய தருணம் எற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

பிரச்சினைகளின் மூல ஆழத்தை முழுமையாகவும், நியாய பூர்வமாகவும் புரிந்துகொண்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கையரசு ஒருபோதும் முன்வரப்போவது கிடையாது.

ஆனால், சமாதானத்தைப் பொறுப்பேற்று அனுசரணை வழங்கும் சர்வதேசம் இதனைத் தட்டிக்கழிக்காது - பக்கச் சார்பின்றி நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இல்லையேல் - மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகள மீதான நம்பிக்கையை தமிழ்மக்கள் முற்றாக இழக்கும் நிலை உருவாவது தவிர்க்கவே முடியாத ஒன்றாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி'யார் பார்வையில்...**

# ஒரு ரூபாய்க்காக உயிரைவிட்ட சிறுமியும் பணிஸ் திருடிய சிறுவனும் பசி செய்த சதியே!

பசியின் கொடுமையைத் தாங்கமுடியாத ஒரு சிறுவன் வியாபார நிலையமொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பணிஸ் ஒன்றை, கடைக்காரர் பார்க்கவில்லையென்று நினைத்து எடுத்துவிட்டான். கடைக்காரர் இதைக் கண்டுபிடித்துவிட்டார். கையும் மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்ட இக்களவைக் கடைக்காரர் விடுவாரா? பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் குருவிற்ற பகுதியில் வெல்லந்துர என்ற இடத்தில் நடந்த இச்சம்பவத்தில் சிறுவனைக் கைது செய்த பொலிஸார் இரத்தினபுரி நீதிவான் முன் கொண்டு போய் நிறுத்தினர். நீதிமன்றம் சிறுவனின் தாயாரை அழைத்து விசாரித்தபோது, பசிக் கொடுமை தாங்காமல்தான் அந்தச் சிறுவன் பணிஸைத் திருடினான் என்பது தெளிவானது.

முடிவில் நிலைமை விளங்கியது. சிறுவர் நன்னடத்தைப் பிரிவு உத்தியோகத்தர்கள் அந்தச் சிறுவனின் அனைத்துச் செலவுகளையும் வழங்கி அவனுக்குக் கல்வியளிக்க முன்வந்தனர். சிறுவனும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறான்.

இப்படியொரு நிகழ்வு பற்றிய செய்தி பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இதை என் முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம் வாசித்துக் காட்டி இப்படியும் நாட்டில் நடந்துகொண்டுதானிருக்கிறது என்றார்.

சில தினங்களுக்குமுன் வட இந்தியாவில் ஒரு சிறுமி பள்ளிக் கூடத்தில் மதிய உணவு சாப்பிடுவதற்காக தாயாரிடம் ஒரு ரூபாய் தருமாறு கேட்டிருக்கிறாள். வறுமையின் பிடியிலுள்ள அந்தத் தாயார் மகளுடைய சாப்பாட்டுக்கு ஒரு ரூபாய் கொடுக்க வழியில்லாமல் பணம் இல்லையென்று மறுத்துவிட்டார். அந்தச் சிறுமி தனது சாப்பாட்டுக்காக தாயார் ஒரு ரூபாய் கொடுக்காததால், மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டாள் என்ற செய்தியும் பத்திரிகைகளில்தான் வெளிவந்திருந்தது என்று சொன்னேன்.

"கொடிது கொடிது வறுமை கொடிது, இளமையில் வறுமை அதனிலும் கொடிது" என்று ஒளவைப் பிராட்டியார் சும்மாவா சொல்லியிருக்கிறார். வட இந்தியாவிலுள்ள சிறுமிக்கும், இலங்கையில் இரத்தினபுரியில் இருக்கும் சிறுவனுக்கும் பசி ஒன்றுதான். இந்தியாவில் சந்திரமண்டலத்தை எட்டிப் பிடிப்பதற்கு விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். ஏவுகணைகள் தயாரித்து விண்ணோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன.

கோடிக் கணக்கில் ஏவுகணைகள் தயாராகின்றன. சினிமாப் படங்கள் பெரும் செலவில் தயாரிக்கப்படுகின்றன. சினிமா நட்சத்திரங்கள் சிலர் கோடி, கோடியாகச் சம்பாதிக்கின்றனர். சினிமா நடிக, நடிகைகளைப் பார்ப்பதற்காகப் பெரும் பணத்தைச் செலவிடுகின்றனர்.

அங்கேதான் மதிய உணவுக்குப் பிள்ளைக்கு ஒரு ரூபாய் கொடுக்கமுடியாத தாய்மார்களும் இருக்கின்றனர். அதேசமயம், வங்கியில் கணக்கு வைத்திருக்கும் பிச்சைக்காரர்களும்கூட இந்தியாவில் தானிருக்கின்றனர். இங்கே இரத்தினபுரியில் பசியின் கொடுமை தாங்காமல் கடைக்காரருக்குத் தெரியாமல் ஒரு பணிஸை எடுத்த சிறுவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருக்கிறான் என்று பரமசிவம் சொன்னார்.

இப்பொழுது இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம். தேர்தலில் போட்டியிடுபவர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வேட்பாளர்களின் உருவப் படங்களுடன் கட்சியின் பெயரையும் குறிப்பிட்டு சுவரொட்டிகளும் ஆளுயரத் தட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் வீதிகளிலும் சந்திகளிலும் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

இந்தச் சுவரொட்டிகளை அச்சடிப்பதற்குப் பெருந் தொகைச் செலவு. இவற்றை ஒட்டுவதற்குப் பசை காய்ச்சும் கோதுமை மாவு, பல ஒட்டிய வயிறுகளை நிரப்புவதற்குப் பாணாகவும் பணிசாகவும் பயன்படக்கூடிய பல மூடைகளின் அளவுடையதாக இருக்கும்.

இவை மட்டுமா? இந்த சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் தேர்தல் சட்டத்தின்படி வேட்புமனு தாக்கலானதும் அகற்றுவதற்காக ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கும், மாலைகளுக்கும் பட்டாசு வெடிகளுக்கும் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்லமுடியாது.

இத்தனை ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள், கொண்டாட்டங்களுக்கு மத்தியில் ஆதரவாளர்களுக்கிடையில் அடிபிடி சண்டை, நீதிமன்ற வழக்கு என்று மற்றொரு புறம் செலவு என்று சொன்னேன்.

இதேசமயம், இருதயத்தில் அடைப்பு, கிட்னியில் கோளாறு என்று குழந்தைகளுக்கு வராத நோய்கள் வந்து கொடுமைப்படுத்துகின்றன. இவற்றுக்குச் சிகிச்சையளிப்பதற்கு பல லட்சம் தேவைப்படுகிறது. தரும சிந்தையுள்ளவர்களின் உதவியை எதிர்பார்ப்பதாக தினமும் பத்திரிகைகளில் உதவி கோரிச் செய்திக் கோரிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இத்தனை நெருக்கடிகளிலும், கஷ்டங்களிலும் இதைவிட மோசமான நெருக்கடிகளை தமிழர் தாயக மக்களான வடக்கு-கிழக்கு மக்கள் தாங்கியிருக்கின்றனர். தமிழர் தாயகத்தின்மீது ஆட்சிபீடத்திலிருந்த சிங்கள இனவாத அரசாங்கங்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட சகல பொருள்களுடன் தலைவலிக்குப் பாவிக்கும் மாத்திரைகள்கூட எடுத்துச் செல்ல முடியாமல் தடைவிதித்தன.

இந்த அத்தியாவசிய உணவுத் தடையிலும் பட்டினியால் தமிழர் தாயகத்தில் எவரும் செத்துப் போனார்கள் என்று செய்திகள் வந்ததில்லை. மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் என்ற செய்திகள் வெளிவந்திருக்கலாம். ஆனால், பட்டினியால் எவரும் செத்ததாகச் செய்தி வெளிவந்ததில்லை.

இத்தனை கஷ்டங்கள், நெருக்கடிகள் வந்தபோதும் இளம்பிள்ளைகள் பசியில் துன்பப்பட்டபோதும், நோயால் துயரப்பட்டபோதும் ஏன் என்று கேட்காமல் இருந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளும், அயல்நாட்டு சுப்பிரமணிய சுவாமிகளும் இப்பொழுது சிறுவர்களைப் படைகளில் புலிகள் சேர்க்கிறார்களென்றும், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களென்றும் ஓலமிடுகிறார்கள்.

இரத்தினபுரியில் ஒரு சிறுவன் பணிஸ் திருடினான் என்று நீதிமன்றத்தில் நிறுத்துகிறார்கள். ஹெல உறுமய என்ற துறவுபூண்ட புத்தபிக்குகளின் அரசியல் கட்சிக் கூட்டத்தில் திரண்ட மக்கள் என்று, ஒரு பத்திரிகை சமீபத்தில் முதல் பக்கத்தில் வெளியிட்ட புகைப்படத்தில், பால்மணம் மாறாத சிறுவர்கள் இருந்ததை சிறுவர் நலனில் அக்கறையுடைய அமைப்புக்கள் மதம் காரணமாகக் கேள்விகேட்கமுடியாதிருந்ததோ? டொக்ரர் ஜயலத் ஜயவர்த்தன மட்டும் ஒரு நேரத்தில் பாதிக்கப்பட்ட வன்னியிலிருந்த மக்களுக்கு மருந்துகள் கொடுத்து உதவியதை மறக்கமுடியாது என்று பரமசிவம் சொன்னார்.

இந்தியாவிலுள்ள குழந்தைக்கும் சிறுவர்களுக்கும், அமெரிக்காவிலுள்ள குழந்தைக்கும், தென்னிலங்கையிலும், வன்னியிலுள்ளவர்களுக்கும் பசி ஒரே பசிதான். இதில் வேற்றுமை இருக்கமுடியாது. இவற்றை உணர்ந்து கொள்வதில்தான் மனிதர்களுக்கிடையில் வேறுபாடு இருக்கிறது என்றேன்.

பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறவர்கள், தமிழர் தாயக மக்களைப் பட்டினி போட்டதையும் மருந்துகூடக் கொண்டுசெல்ல முடியாமல் தடுத்ததையும் இன்று இந்தக் தேர்தல் காலத்தில் நினைத்துப் பார்க்கட்டும் என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

தெற்குத் திசையில் இருந்து....

இந்திரஜித

# உள்ளக முரண்பாடுகளின் காரணிகளும்; வெளிக்களப் போட்டி நிலைப்பாடுகளும்




இலங்கையில் ஐந்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கான முனைப்புகளின் இரண்டாம் கட்டம் எட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி தேர்தல் முனைப்பின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் பிரதான வேட்பாளர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் - எதிர்க்கட்சி தலைவர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும் மாத்திரமே கடும் போட்டி நிலவும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த கடும் போட்டியானது இலங்கையில் தற்போதைய சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ளப்படும் இரண்டு பிரதான கருத்துக்களுக்கு இடையிலான போட்டியாகவே அமைந்துள்ளது.

ஒற்றையாட்சியா? அல்லது ஐக்கிய இலங்கையா? என்பது ஒரு கருத்து. இனவாதமா? அல்லது இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கான இணக்கமா? என்ற கருத்து இரண்டாவது கருத்தாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்கனவே வெளியிட்டுள்ளது எனினும், சிறிலங்கா சுதந்திக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவில்லை. இதற்குப் பிரதான காரணமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே கருதப்படுகிறார். ஜனாதிபதியின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் மஹிந்த ராஜபக்ஷ- ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும், செய்துகொண்ட ஒப்பந்தங்கள் காரணமாக ஜனாதிபதி கடும் கோபமுற்றுள்ளார். இதன் காரணமாக அவர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி வாய்ப்புக்கு ஆதரவு வழங்குவதில் தொடர்ந்தும் பின்னடித்து வருகிறார்.

ஜனாதிபதியின் தலைமையில் கடந்த வாரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நடைபெற்ற போது, ஏற்கனவே திட்டமிட்ட அக்கரைபற்று கூட்டத்தில் பங்குகொள்ள பிரதமர் செல்ல வேண்டியிருந்தமையாலும், ஜனாதிபதி நண்பகல் 12 மணிக்கு வர வேண்டிய கூட்டத்திற்கு பிற்பகல் ஒன்றரை மணிக்கு வந்ததன் காரணமாகவும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பது தொடர்பான முடிவு எட்டப்படவில்லை. எனினும் தாம் வெளிநாடு சென்று வரும்வரையில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படக் கூடாது என்ற ஜனாதிபதியின் உத்தரவின் அடிப்படையில் இதுவரை சிறிலங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படவில்லை. ஆனால் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் எழுந்




துள்ள கருத்து முரண்பாடு காரணமாக தற்சமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக இல்லாமல் ஜே.வி.பி முன்னர் இணங்கி செயற்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ களம் இறங்கியுள்ளார். இதனால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்காமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது,

இதனால் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவாளர்கள் அல்லது பண்டாரநாயக்க பரம்பரைக்கு விசுவாசமானவர்களின் வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ இழக்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டுள்ளார். எனினும் தன்னை சுதாகரித்துக் கொண்டு முன்னகர்ந்த அவருக்கு ஆறுமுகன் தொண்டமானும், ரவூப் ஹக்கீமும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்தமையானது மேலும் பலத்த மனப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இறுதி நேரத்திலும் கூட ஆறுமுகன் தொண்டமானை தமது பக்கத்துக்கு கொண்டுவர பிரதமர் அமைச்சர் மங்கள சமரவீரவின் மூலமாக மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. ஆறுமுகன் தொண்டமான் தான் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவேண்டிய நிலை ஏற்பட மக்களே காரணமென்றும், தான் மஹிந்தவை ஆதரிக்க விரும்பினாலும் மலையக மக்கள் ரணிலையே ஆதரிக்க விரும்பியதாகவும், தனது நிலைப்பாட்டுக்கு ஒரு காரணத்தைக் கூறியுள்ளார்.

அவர் ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தமைக்கான இரண்டாவது காரணமாக, பிரதி அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி, தொண்டமானின் ஆதரவு தங்களது கட்சிக்குத் தேவையில்லை என பிரதமர் பங்கேற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தமையாகும் என்று கருதப்படுகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொண்டமானின் ஆதரவைப் பெற பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். இந்த நிலையில் அவரின் முடிவு மாறுபட்டதையடுத்து, அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை பிரதமர் வழங்கவில்லை. அவருக்குப் பதிலாக அவரின் சகோதரர் பசில் ராஜபக்ச மூலமே ஆறுமுகன் தாம் மேற்கொண்ட தீர்மானத்துக்கான காரணத்தைக் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை ஆறுமுகன் தொண்டமானும், ரவூப் ஹக்கீமும் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டமையை அடுத்து, தற்சமயம் அவர்களுக்கு எதிராக பிரசுரங்களையும், பல ஆவணங்களையும் வெளியிட்டு, அவர்களைப் பழிவாங்கும் முயற்சியில் ஆளும் கட்சி இறங்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க இன்னும் சில தினங்களில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், முழுமையாக ஜே.வி.பியினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் கருத்துகளே உள்ளடங்கப்போவது உறுதியாகவுள்ளது. இதன் அடிப்படையில் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகமாகும் நிலையே இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிரியும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக அனுர பண்டாரநாயக்கவின் அத்தனகல தொகுதிக்காக ஜனாதிபதி தேர்தலின்போது பிரசார நடவடிக்கைக்குப் பொறுப்பாக அவரால் நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர் ரெஜி ரணதுங்க மற்றும் பிரதி அமைச்சர் அழகியவன்ன ஆகியோருக்கு எதிராக மாற்றுக்குழு ஒன்று பிரதமரின் வெற்றிக்காக களம் இறக்கப்பட்டுள்ளது. இது பிரதமரையும் சந்தித்து ஆலோசனையையும் பெற்றுள்ளது.

எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவு அத்தனகலையில் ஆரம்பமாகியுள்ளது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்திருந்தாலும், அதனைக் கட்டுக்குள் கொண்டுவருவதில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிகண்டுள்ளார். நிலைமை இவ்வாறிருக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய கள வாய்ப்புகள் இன்னமும் எந்தப் பக்கமும் நிச்சயமற்ற நிலையிலேயே இருக்கிறது. ஏனெனில் சிங்கள மக்கள் இனவாதிகளின் பிரசாரங்களுக்குப் பின்னால் செல்லக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. அதேபோல ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளால் மஹிந்தவுக்கான அனுதாப அலைகள் எழும் சந்தர்ப்பங்கள் இல்லை என ஒரேயடியாகக் கூறமுடியாது. எனவே அடுத்துவரும் வாரங்களே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சாதக, பாதக நிலவரங்களைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தவுள்ளன.

ஆன்மீகம்...

காரை எம்.பி.அருளானந்தம்.

# எண்ணியதை தரும் எம் பெருமாள் வண்ணையம்பதியில் தேரேறுகிறார்!

**யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேர்த் திருவிழா இன்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.**

நாரயணனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம். தொன்மை வரலாற்று சிறப்புத்தத்துவங்களை தன்னுள் அடக்கிமிளிரும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களால் அருளப்பட்ட அருட்பாசுரங்களிலே திருமாலின் பன்னிரு திருப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமனன், சீதரன், இருதடிகேசன், பத்மநாமன், தாமோதரன் என்பனவாகும். இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம், பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது. நாரயணன் என்பது நாரம் அயனன் என்ற இரண்டு சொற்களால் ஆனது.

இந்தச் சொற்களுக்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர். முதலாவது அறிவில்லாத பொருள்களின் கூட்டத்துக்கு இடமாக உடையவன் என்பது. இரண்டாவது அழிவில்லாத பொருள்களை இடமாக உடையவன் என்பதாகும். இவை முறையே வியாபதத்துவம், அந்தர்யாமித்துவம் எனப்படும். இந்தக் கருத்தை ஆழ்வார் பாசுரம் மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது.

'அறிகிலேன் தன்னுள் அனைத்துயரும் நிற்க நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்பது திருவாய் மொழி. இத்தகு சிறப்புக்கள் கொண்ட காத்தல் கடவுளாக விளங்கும் நாரணன், ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற திவ்விய



திருநாமத்தோடு பன்னெடுங் காலமாக, புராதன சிறப்புகள் பலவற்றோடு கோயில் கொண்டு எழுந்தருளி, அருள்பாலித்து வருகின்றார்.

இந்த ஆலயமானது பல குறிச்சிகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் கிழக்கு திசையில் ஆஞ்சநேயர் சந்நிதியும், தேர்முட்டியும், கருடன் ஆலயமும் அமைந்து காட்சி தருகின்றன.

ஆலயத்தின் தென்புறத்தே அழகிய பூந்தோட்டமும், சந்திர புஸ்கரணி என்ற திருமஞ்சன தீர்த்த தடாகமும், ஆலயத்தின் வடக்கு பகுதியில் ஸ்ரீலக்சுமி நாராயணன் கல்யாண மண்டபமும் அமைந்து, வேங்கடவனின் திருக்கோவிலுக்கு சிறப்புச் சேர்க்கின்றன.

பெருமாள் பவனிவருகின்ற திருத்தேரில் கூட - ஸ்ரீராமயண, மகாபாரத இதிகாசங்களையும், ஸ்ரீகிருஷ்ண லீலைகளையும், அதன் வரலாறுகளையும் சித்தரிக்கின்ற திருக்காட்சிகளை காணலாம். ஆலய பிரதான வாயிலில் அழகுடன் ஏழுவாயிலைக் கொண்டவானலாவாக உயர்ந்த இராசகோபுரம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. தேவியர் சகிதம் இணைந்த மூலவரும், பரிவ்ார மூர்த்திகளும், நவக்கிரக பீடமும் அமைந்து- யாழ்நகரிலே பிரசித்திபெற்ற வைணவ ஆலயமாக வரதராசப் பெருமாள் ஆலயம் விளங்குகின்றது.

யாழ். நகரில் ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராசசேகரரின் காலத்தில் சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஆலயம் காலப்போக்கில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப் பெற்ற நிலையில், பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தேயுடைய திவ்விய திருத்தலமாக விளங்கிவருகின்றது.

இந்த ஆலயத்தில் ஸ்நபன மண்டபத்தில் மணீபூரகம் என்ற பகுதியில், ஸ்ரீரங்க நாதரின் சிலவிக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக ஸ்ரீ அரங்க நாதசுவாமி, பிரமனை தாமரை மலரில் தாங்கிய வண்ணம், ஆதிஷேனாகிய ஐந்து தலைகளுடைய அரவின் மீது சயனித்திருக்கின்ற காட்சி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்ட ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் தேர்த்திருவிழா இன்று பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

பத்து அவதாரங்களை எடுத்த பகவான் - திருத்தேரில் ஆரோகணித்து வருகின்ற திருக்காட்சி அற்புதமயமாக இருக்கும். வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தந்தருள, காத்தல் கடவுளாக அபயம் தந்து அரவணைத்து நல்வாழ்வு தர நாரயணன் திருத்தேரில் வருகின்றான்.

நினைத்ததை நிறைவேற்றும் வண்ணனாக வண்ணையம்பதியில் தேரேறும் கண்ணன் தேர்வடம் பற்றுவோம். வாழ்வாங்கு வாழும் வரம்கேட்போம். எல்லா நலங்களையும் அருளும் எழில் வண்ணனின் தேர்விழாவில் அவன் கழல் தொழுது, அவனியில் நலமுடன் வாழ்வோமாக. *

## அன்னை பராசக்தி! உன் பேரருளுக்காய்



**வீரம் செழித்து நிற்கின்ற நிலத்தனில்**
**வீரம் தெய்வமே! துர்காதாயே! ஆராதிக்கிறோம்.**
**சிங்க வாகனத்தில் எழுந்து நிற்பவளே!**
**பங்கமில்லா வாழ்வுக்கு வழி காட்டம்மா.**

**செல்வத்துக்கு அதிபதியாய் நிற்கின்ற திருமகளே!**
**தேசத்தைப் பாரம்மா; தேடிச் சேர்த்த தெல்லாம்**
**அன்றைய போரோடு ஆழிப் பேரலையுமாய் தொலைந்ததே**
**சீரோடு நாம் வாழ மன்றாடியே நிற்கிறோம்.**

**கலை வாணித் தாயே! உன் பேரருளுக்காய்**
**ஓலையெடுத்து தாளமிசைப்பது மாணவச் செல்வங்கள் மட்டுமா?**
**கலைஞர்களோடு அறிஞர்களுமாய் போற்றிப் பாடுகிறோம்**
**அலை கடல் போல ஆழ்ந்த நல்லறிவுக்காய்.**

**அன்னை பராசக்தி! அகிலாண்டேஸ்வரித் தாயே!**
**மண்ணிலே நாம் மகிமையோடு வாழ்வதற்காய்**
**நவராத்திரி நாள்களில் கொலுவேற்றி நோற்கிறோம்.**
**நாயகியே! எல்லாமே கிடைத்திட அருளிடம்மா.**

**மீசாலையூர் கமலா**

# பாகிஸ்தானுக்கு உலக நாடுகளின் உதவி குவிகிறது

## இராணுவ ஹெலிகளை அமெரிக்கா அனுப்பியது!



வொஷிங்ரன் —

**பூமி அதிர்ச்சியால் பாரியளவில் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு உலக நாடுகளின் உதவிகுவிகிறது. அமெரிக்கா அவசரகால உதவியாக ஒரு லட்சம் அமெரிக்க டொலரையும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவ ஹெலிகொப்டர்களையும் அனுப்பிவைத்தது.**

பாகிஸ்தானில் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியில் பல்லாயிரம் பேர் உயிரிழந்தனர். பல கிராமங்கள் அடியோடு அழிந்து போய் விட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ உலக நாடுகள் முன்வந்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து அதிர்ச்சியையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் உதவிதேவைப்பட்டால் அதையும் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக புஷ் கூறினார்.

அவசரகால உதவியாக ஒரு லட்சம் அமெரிக்க டொலரை அளிப்பதாகவும், மீட்புப் பணிகளில் ஈடுபட இராணுவ ஹெலிகொப்டர்களை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து அரசு – மீட்புக் குழுவினரையும், மீட்புபணி நிபுணர்களையும், மோப்ப நாய்களையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்துள்ளது. முதல் விமானத்தில் அவர்களுடன் போர்வைகள் போன்ற உதவிப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 2 ஆவது விமானம் நட்டிங்ஹாம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

மருத்துவக் குழுக்களை அனுப்பி உதவும்படி ஜப்பானை பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து 50 மருத்துவப் பணியாளர்களை ஜப்பான் அனுப்பியுள்ளது. இது தவிர ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்கள், போர்வைகள் போன்றவற்றையும் நிவாரணப் பணியாளர்களையும் அனுப்பியுள்ளது.

துருக்கி 2 இராணுவ விமானங்களில் 30 வைத்தியர்கள், 21 மீட்புப் பணியாளர்கள், 2 அம்புலன்ஸ்கள், ஒரு போக்குவரத்து வாகனம் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் 3 விமானங்களில் உதவிப் பொருட்களை ஏற்றி அனுப்பும்படி செஞ்சிலுவை சங்கத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா உடனடியாக 2 கோடி ரூபா வழங்கியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா ஆகிய நாடுகளும் நிவாரணப் பொருட்களையும், மீட்புக் குழுவினரையும் அனுப்பியுள்ளன.

கனடா ஒரு கோடி ரூபாவை அவசரகால உதவித் தொகையாக அளித்துள்ளது.


பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட உயிரிழப்பை அறிந்து தன் அதிர்ச்சியையும் துக்கத்தையும் கனடா பிரதமர் போல் மாட்டின் தெரிவித்தார்.

பங்காளதேஷ் ஜனாதிபதி இஜாஜ்தின் அகமட், பிரதமர் கலீதா ஷியா ஆகியோர் பூகம்பம் பற்றி அதிர்ச்சி அடைந்ததாகவும் பலியானவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

# கௌதமாலாவில் பாரிய நிலச்சரிவு

## கிராமமொன்று மண்ணில் புதைந்தது!

### 1400 பேர் உயிரிழந்ததாக அச்சம்



பனபாஜ் —

கௌதமாலாவில்ஸ்டான் சூறாவளியின் எதிரொலியாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒரு கிராமமே மண்ணில் புதைந்தது. இதில் ஆயிரத்து 400 பேர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தென்னமரிக்காவிலுள்ள கௌதமாலாவில் நில நடுக்கம், எரிமலை சீற்றம் மற்றும் சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி உருவாகி பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

ஸ்டான் சூறாவளி தாக்குதலால் கௌதமாலாவில் பல நாட்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதையடுத்து கடந்த புதன்கிழமை மலையடிவாரத்தில் அமைந்திருந்த பனபாஜ் என்ற கிராமம் அருகே மண் சரிவு ஏற்பட்டது. அந்தக் கிராமத்தையே மண் குவியல் மூடிவிட்டதில் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் அனைவரும் மண்ணுக்கு அடியில் சிக்கிக்கொண்டனர். இதில் ஆயிரத்து 400 பேர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் தீயணைப்புத் துறைச் செய்தித் தொடர்பாளர் மரியோ குரூஸ் கூறுகையில் –

48 மணி நேரத்துக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவத்தில் யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை. அனைவரும் உயிரிழந்திருக்கலாம். இதுவரை 10 உடல்களே மீட்கப்பட்டுள்ளன. காணாமற் போனவர்கள் மற்றும் இறந்தவர்கள் யார் என்பது பற்றிய பட்டியலைத் தயாரித்து வருகிறார்கள். ஏராளமானோர் மண்ணில் புதைந்து போனதால் மீட்புப் பணிகளை நிறுத்திவிட்டு ஒட்டு மொத்தமாக இந்தக் கிராமத்தையே சவக் கிடங்காக அறிவிப்பது பற்றி அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

# பூகம்பத்தில் பின்லேடன் உயிரிழந்தாரா?

## சந்தேகம் கிளப்புகிறது அமெரிக்கா!



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் இடம்பெற்ற பாரிய பூகம்பத்தால் பாகிஸ்தான் எல்லைப் புறத்திலுள்ள ஆப்கானிஸ்தானில் தலைமறைவு வாழ்க்கை நடத்திவரும் பின்லேடனும் உயிரிழந்திருக்கலாமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பின்லேடனை அமெரிக்கா பல வருடங்களாகத் தேடி வருகிறது. ஆப்கானிஸ்தானில் பின்லேடன் தலைமறைவாக இருப்பதாகக் கருதி அந்த நாட்டின்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. ஆனால் பின்லேடன் கதி என்ன என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள ஒரு இடத்தில் பின்லேடன் தலைமறைவாக இருப்பதாகத் தகவல் வெளியானது. என்றாலும் அமெரிக்கப் படையினரிடம் அவர் பிடிபடவில்லை.

இதற்கிடையே கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானைப் பூகம்பம் தாக்கியது. இதில் பின்லேடன் மறைந்திருப்பதாகக் கருதப்படும் எல்லைப் பகுதியிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

பூகம்ப தாக்குதலில் ஒசாமா பின்லேடன் இறந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் இது தொடர்பான உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

மீட்புப் பணி நடைபெறும் பகுதிகளில் பின்லேடன் பற்றி தகவல் சிக்குமா என்று அமெரிக்க அதிகாரிகள் ரகசியமாகக் கண்காணித்து வருகின்றனர்.

# ஹெலிகொப்டர்கள் பற்றாக்குறை; மீட்பு பணிகளை மேற்கொள்ள முடியாது திணறுகிறது பாகிஸ்தான்!



இஸ்லாமாபாத் —

இந்தியாவின் வடக்குப் பகுதியையும் பாகிஸ்தானையும் கடந்த சனிக்கிழமை மிகப்பெரிய பூகம்பம் தாக்கி பேரழிவை ஏற்படுத்திவிட்டது. இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் யூரி நகரம் மற்றும் அவைகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் கடுமையான நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பகுதியில் ராணுவம் முழு வீச்சில் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதே சமயம் இந்தியாவை ஒட்டியுள்ள பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் பாகிஸ்தான் திணறுகின்றது.

பாகிஸ்தான் – காஷ்மீரின் தலைநகரான முசாபராபாத் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பாலா கோட் பகுதியில் நிலச்சரிவுகளால் வீதிகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. வீதிகளில் பெரும் பிளவுகளும் உருவாகியுள்ளது.

இதனால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் மீட்பு வாகனங்கள் முசாபராபாத் மற்றும் பாலா கோட் நகரை நெருங்க முடியவில்லை. இதனால் மீட்புப் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள முடியவில்லை.

பூகம்பம் ஏற்பட்டு முசாபராபாத் சேதம் அடைந்த தகவல் கிடைத்ததும் சென்ற மீட்பு வாகனங்கள் இடைவழியிலேயே திரும்பிவிட்டன. ஹெலிகொப்டர்கள் மூலம் இறங்கி மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதற்கு ஏராளமான ஹெலிகொப்டர்கள் தேவைப்படுகிறது. ஆனால் போதுமான ஹெலிகொப்டர்கள் பாகிஸ்தானிடம் இல்லை அதனிடம் இருக்கும் ஹெலிகொப்டர்கள் மூலம் பாத் நகரில் மட்டுமே மீட்புப் பணி மேற்கொள்ள முடிந்தது. பாலாகோட் உட்பட பல கிராமங்களுக்கு மீட்புக் குழு செல்ல முடியவில்லை. 24 மணிநேரம் கழித்துத்தான் அங்கு ஏற்பட்ட பூகம்ப சேதம் வெளியுலகுக்குத் தெரிந்தது.

அந்தப் பகுதிகளுக்கு ஹெலிகொப்டர்களில் மீட்புக் குழு சென்ற பிறகுதான் 30ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியான விபரம் தாமதமாக தெரியவந்தது.

தற்போது பாகிஸ்தானிடம் மீட்புப் பணிகளை மேற்கொள்ள போதுமான ஹெலிகொப்டர்கள் இல்லாததால் உலக நாடுகளை தந்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதே சமயம் அயல் நாடான இந்தியாவிடம் இருந்து பாகிஸ்தான் எந்த உதவியையும் நேரடியாக இதுவரை கேட்கவில்லை. இந்தியா – பாகிஸ்தான் எல்லைக் கோட்டு பகுதியில் கூட்டான மீட்புப் பணிமேற்கொள்வது பற்றியும் பாகிஸ்தானிடம் இருந்து எந்த வேண்டுகோளும் வரவில்லை என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் அளவுக்கு பாகிஸ்தானிடம் உட்கட்டமைப்பு வசதிகளும் இல்லை. ஏற்கனவே பொருளாதாரத்தில் சீர்குலைந்திருக்கும் பாகிஸ்தான் இந்த நிலநடுக்கத்தால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.



# இமயமலைப் பகுதியில் பாரியளவில் பூகம்பம் ஏற்படும் அபாயமுள்ளது!

## எச்சரிக்கிறார் அமெரிக்க பூகம்பவியல் நிபுணர்



புதுடெல்கி —

இமயமலைப் பகுதியில் பாரியளவிலான பூகம்பம் ஏற்படும் என்று அமெரிக்க பூகம்பவியல் நிபுணர் எச்சரித்துள்ளார்.

இமயமலைப் பகுதியில் 2 லட்சம் மக்களைக் கொல்லக்கூடிய கடுமையான பூகம்பம் ஏற்படும் என்று இந்திய – அமெரிக்க பூகம்பவியல் நிபுணர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்திருந்தனர்.

அது பலித்தது போன்று கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதியில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது.

இத்துடன் நின்றுவிடாது எதிர்காலத்தில் இதைவிடப் பெரிய பூகம்பங்கள் ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச பூகம்பவியல் நிபுணர் ரோஜர் பில்ஹாம் கூறியதாவது –

உலக நோக்கு

ஆசியாவைத் தாங்கும் பூமித் தகட்டுடன் இந்தியாவைத் தாங்கும் பூமித் தட்டு 4 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பலமாக மோதியது. அதனால்தான் இமய மலை உருவானது.

அப்போதுமுதல் ஆசிய பூமித்தட்டை நோக்கி இந்திய பூமித்தட்டு ஆண்டுக்கு 4 சதவீதம் அளவில் நகர்ந்து வருகிறது. இதனால் இந்திய தட்டில் பல விரிசல்கள் ஏற்பட்டு பூமியில் அழுத்தம் உருவாகியிருந்தது.

பெரிய பூகம்பங்கள் ஏற்படுவதன் மூலமே இந்த அழுத்தம் வெளியாகும். இமயமலையில் சில இடங்களில் 8 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்படும்.

இமயமலைப் பகுதியில் பூமி விரிவடைந்து வருகிறது. கிழக்குப் பூமித் தட்டு மியான்மர் (பர்மா) பகுதியில் இருந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பலுகிஸ்தான் பகுதிகளை நோக்கி நகருகிறது.

இந்தப் பகுதியில் 12 இடங்கள் பூகம்ப அபாய பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் எதிர்காலத்தில் பாரிய பூகம்பங்கள் ஏற்படும்.

கடந்த நூற்றாண்டில் – முதல் 50 ஆண்டுகளில் 7.5 முதல் 8.5 ரிக்டர் அளவிலான 3 பூகம்பங்கள் ஏற்பட்டன. அடுத்த 50 ஆண்டுகள் இந்தப் பகுதி அமைதியாக இருந்தது.

300 முதல் 800 கிலோமீற்றர் நீளமுள்ள கார்வால் – குமார் இமயமலைப் பகுதியில் இதுவரை பூகம்பம் ஏற்படவில்லை. மத்திய இமய மலையின் இடைவெளி என்று அழைக்கப்படும் இந்தப் பகுதி விரைவில் பாரிய பூகம்பத்தைச் சந்திக்கும் என தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காயங்களுடன் மீட்கப்பட்டவர் போதனா வைத்தியசாலையில்!

மாயக்கை விறுமர் கோவிலுக்கு முன்பாக கடுமையாக தாக்கப்பட்டு வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட முத்துலிங்கம் சந்திரகுமார்(வயது 33) என்பவர் பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோதும் மேலதிக சிகிச்சைக்காக மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளார்.

இவருக்கு இராணுவப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபருக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 15 இஸ்லாமிய இயக்கங்களுக்கு பிரிட்டன் அரசு தீவிர தடை!

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக தெரிவித்து 15 இஸ்லாமிய அமைப்புக்கள் மீது பிரிட்டன் கடுமையான தடையை விதித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக 25 சர்வதேச அமைப்புக்கள் தடைசெய்யப்பட்ட நிலையில், இவற்றுள் 15 இஸ்லாமிய அமைப்புக்களும் மிக முக்கியமானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புக்கள் ஈராக் உஸ்பெகிஸ்தான், லிபியா, பாகிஸ்தான், சோமாலியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் மொறோக்கோ ஆகிய நாடுகளில் தமது செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றன.

பிரிட்டனில் தடைவிதிக்கப்பட்ட 25 அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒன்றாக இருந்தபோதும் - புதிதாக வெளியிடப்பட்ட 15 இயக்கங்களைக்கொண்ட பட்டியலில் புலிகளின் பெயர் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது புலிகள் மீதான மென்போக்கை பிரிட்டன் கடைப்பிடிக்க முனைவதாகவே கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போரை எதிர்கொள்ள...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கருணா குழுவினருக்குப் பின்னால் இராணுவ புலனாய்வுத் துறை இயங்கிவருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டி வருவதை ஏற்க முடியாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒஸ்லோ பேச்சுக்களின் அடிப்படையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையடுத்து அனைத்து துணைப் படைகளும் களையப்பட்டுவிட்டன.

நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் எந்தவொரு எதிர்பாராத சூழ்நிலையையும் எதிர்கொள்ள இராணுவம் தயாராக உள்ளது. நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவுசெய்ய அனுமதி கேட்டுள்ளோம்.

வளரும் நாடுகளின் எந்த இராணுவத்துக்கும் அடுத்த நிலை இராணுவமாக - 2 ஆவது இராணுவமாக இலங்கை இராணுவம் இருக்கக் கூடாது என்பதே என் விருப்பம் என்றார்.

முன்னதாக இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் இராணுவத் தளபதி லெப். கேணல் சாந்த கொட்டேகொட பேசியபோது -

அமைதி காலத்திலும், யுத்த காலத்திலும் இராணுவம் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. தனது வலிமையை இராணுவம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருக்கிறது.

தெற்காசியா முழுமையிலுமே பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

இரு தசாப்த யுத்த காலத்தையும், கடந்த மூன்று ஆண்டுகளாக அமைதி காலத்தையும் சந்தித்துள்ளோம். அமைதிச் சூழலை செயற்பாடுகளால் உருவாக்கலாம். ஆனால், மனதளவில் அமைதிச் சூழலை எதிர்கொள்வது என்பது கடினமானது.

சர்வதேச நாடுகளின் இனப் பிரச்சினைகள் பெரும்பாலானவற்றில் அமைதிப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட்டுள்ளன.

அமைதி மற்றும் யுத்த சூழல் இரண்டுக்கும் இராணுவத்தினர் எப்போதும் உடலளவிலும், மனதளவிலும் தயாராக இருப்பதன் மூலம் நாட்டின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற முடியும் என்றார் அவர்.

## உணர்வுபூர்வமாக...

தனேஸ்வரக் குருக்கள் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து இவரது திருவுருவப்படம் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்பட்டு, ஊர்வலமாக நினைவுத்தூபி அமைந்திருந்த இடத்திற்கு அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் எடுத்துவரப்பட்டது.

இதனையடுத்து நினைவுத் தூபிமுன் பொதுச்சுடரினை வீரவேங்கை நந்தினியின் தாயார் ஆனந்தம் திரவியம் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியினை கரும்புலி மேஜர் மகாலிங்கத்தின் தாயார் தங்கராசா நாகேஸ்வரி ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரினை வீரவேங்கை ராதாவின் தாயார் புவனேஸ்வரி கணேஸ் ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து நினைவுத் தூபிக்கான மலர்மாலையினை கோப்பாய் உதவிப்பிரதேச செயலர் அஞ்சலிதேவி சாந்தசீலன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயகுமார் ஆகியோர் அணிவித்தனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து பொதுமக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து நினைவுரைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்பத்மினி சிதம்பரநாதன், ம.க.ஈழவேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவநேசன் உட்பட பாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, தென்மராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை 11.30 மணிக்கு சர்வதேச தமீழிழ மாணவர் பேரவை அலுவலர் ப.கவிதா தலைமையில் 2ஆம் லெப்ரினன்ட். மாலதியின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சாவகச்சேரி முன்னாள் அதிபர் சந்திரசேகரன், முன்பள்ளி இணைப்பாளர் சிவதர்மிகா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தென்மராட்சி பொதுஅமைப்புக்கள் ஒன்றியச் செயலாளர் சற்குணராசா ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து 2ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை அதிபர் சிவானந்தம் ஏற்றிவைக்க விஜயரூபன் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரை நடைபெற்றன.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உட்பட தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் மாலதி நினைவு நாளும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் பெரும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலக...

நடைபெற்றுவரும் வேலைத்திட்டங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. உலக உணவுத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் வேலைத் திட்டங் களுக்கு விடுதலைப் புலிகள் வழங்கிவரும் ஆதரவுக்கு பணிப்பாளர் போல்ஸ் கைற்றி கிறிஸ்றோபன் நன்றி தெரி வித்தார்.

எதிர்காலத் திட்டத்தில் 5 ஆம் வகுப்புக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்குரிய சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பற்றி தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் போல்ஸ்கைற்றி கிறிஸ்றோபசன் கேட்டு அறிந்துகொண்டார்.

தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராஜா, தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## வர்த்தகர்...

ஆஜர்படுத்தியபோது - கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் தடுத்துவைத்து விசாரணை நடத்தவும் நீதிவான் அனுமதி வழங்கினார்.

இதனையடுத்து இவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரிக்கப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

## சிலாபம்...

துக்கிடமான பொதியொன்றிலிருந்து பெருமளவிலான ஆயுதங்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

சிவிலியன் ஒருவர் கொடுத்த தகவலையடுத்தே பொலிஸார் இந்த ஆயுதப் பொதியை கைப்பற்றினர். இந்தஆயுதப்பொதியினுள் ஒரு சினைப்பர் துப்பாக்கி, மற்றும் மூன்று மகசின்களும், 82 ரவைகளும், இரண்டு 7.2 மி.மீ மைக்ரோ பிஸ்டல்களும், இவற்றுக்கான ஆறுமகசின்களும், 45 ரவைகளும், 7 கைக்குண்டுகளும் இருந்தன.

வீதியோரத்தில் ஆயுதப் பொதி எவ்வாறு கொண்டுவந்து போடப்பட்டது என்பது தொடர்பாக பொலிஸார் தீவிரவிசாரணை நடத்திவருகின்றனர். நேற்றுமுன்தினம் மாரவில பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தியிருந்தனர். இதன்போது எவராவது ஆயுதப் பொதியைக் கைவிட்டுச் சென்றிருப்பார்கள் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

உயர்மட்ட பிரமுகர்கள் எவரையாவது கொலை செய்யும் நோக்குடன் இந்த துப்பாக்கிகள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இன்று மாரவிலவுக்கு அப்பாலுள்ள வாரியப்பொலவில் ஜனாதிபதி சந்திரிகா மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பிரசாரக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார். இந்த நிலையில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிரவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் இந்தப் பகுதியில் பாதுகாப்பும் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காயத்திரி...

இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுக்காலை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி ராஜ்குமார் சுவாமிகளின் அலுவலகத்தினுள் நுழைந்த இனந்தெரியாதகுழுவொன்று அங்கிருந்த அலவலக உபகரணங்கள் பூசைக்குப் பயன்படுத்துகின்ற பொருட்கள் என்பவற்றை முற்றாகத் தீயிட்டுக் கொளுத்தியதுடன் 50 அடி உயரத்திலிருந்து சிவலிங்க வடிவில் அமைக்கப்பட்டுவரும் கட்டடத்தினுள் இருந்த பொருட்களை அடித்து நொருக்கி தீயிட்டு எரித்துவிட்டுத் தப்பிச்சென்றது.

இதேவேளை மேற்படி மடத்திலுள்ள காயத்திரி காமகோடி பீடத்துக்கு ராஜ்குமார் சுவாமிகள் கடந்த சனியன்று இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் இணுவில் பகுதியிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தார்.

இவர் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரின் உதவியுடன் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலைக்கவசம் இல்லாத பயணம் யாழ். நீதிபதி விநோத தீர்ப்பு!

யாழ்ப்பாணம்———

யாழ்.நகரப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாத ஒருவரை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிள் சாரதிக்கு ஆயிரம் தடவைகள் மோட்டார் சைக்கிளில் வேறு நபரை தலைக்கவசம் அணியாமல் ஏற்றிச்செல்லமாட்டேன் என எழுதி வழங்குமாறு யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் உத்தரவிட்டார்.

யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிளில் சாரதியுடன் பின்புறம் அமர்ந்து பயணம் செய்பவரும் தலைக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்டதற்கமைய பொலிஸார் யாழ்.குடாநாட்டில் திடீர் வாகனப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத நபர் ஒருவரை தனது மோட்டார் சைக்கிளில் அமர்த்தி பயணம்செய்த மேற்படி மோட்டார் சைக்கிள் சாரதிக்கு எதிராக பொலிஸார் யாழ்.நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

மேற்படி வழக்கை விசாரித்த நீதிவான் ரூபா 3500 தண்டம் விதித்ததுடன் ஆயிரம் தடவைகள் நான் இனிமேல் தலைக்கவசம் அணியாது எந்த நபரையும் ஏற்றிச் செல்ல மாட்டேன் என்று எழுதி நேற்றைய தினமே சமர்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# குளோரின் வாயுக் கசிவில் 9 இராணுவத்தினர் பாதிப்பு!

சிலாபம் ———

சிலாபம் பிரதேச சபைக் காரியாலயத்தில் இருந்த குளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் அருகிலுள்ள மாதம்பே 11 ஆவது கஜபா றெஜிமென்ட் இராணுவ முகாமில் இருந்த 9 இராணுவத்தினர் பாதிக்கப்பட்டனர். இவர்கள் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

முகாமின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த சார்ஜன்ட் ஒருவரும், லான்ஸ் கோப்ரல் ஒருவரும் 7 படையினரும் மயக்கமடைந் ததையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலில் மாதம்பை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள், பின்னர் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். மோசமாகப் பாதிக்கப்பட்ட இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

சிலாபம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் தண்ணீர் தாங்கி சுத்திகரிப்புத் திட்டத்திற்காக இந்த குளோரின் சிலிண்டர் அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்த கசிவு அருகிலுள்ள வீடுகளையும் பாதித்தபோதிலும் இராணுவ முகாமிலிருந்தவர்களுக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த குளோரின் சிலிண்டர் சுமார் 25 வருடப் பழைமை வாய்ந்ததென்றும், அதில் துருப்பிடித்திருந்த ஒரு இடத்திலிருந்தே கசிவு ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# வவுனியா அரசியல் பொறுப்பாளருடன் கண்காணிப்புக்குழுவினர் சந்திப்பு!

வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழுப் பொறுப்பதிகாரி ஜோனி அனினனுக்கும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானத்திற்குமிடையில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சந்திப்பொன்று புளியங்குளத்தில் இடம்பெற்றது.

போர்க்காலத்தில் எவ்வாறு படையினர் செயற்படுகின்றனரோ அதே போன்று வவுனியாவில் தற்போது படையினர் செயற்படுவதுடன், புதிதாக காவலரண்களை அமைத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் சோதனைச் சாவடியில் படையினர் மக்கள்மீது கெடுபிடியான சோதனை நடவடிக்கைகளைத் தேவையற்ற வகையில் மேற்கொள்வதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காக ஞானம் கண்காணிப்புக்குழுப் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொது மக்களும் தம்மிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளதாகவும் எனவே படையினருடனான சந்திப்பில் இது குறித்து தீர்க்கமாக கலந்துரையாடப்படுமெனவும் கண்காணிப்புக்குழு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (03)

## ஜே.வி.பி...

குற்றம் சாட்டியுள்ளார். அங்கு தொடர்ந்து பேசிய அவர் -

நாட்டின் இராணுவத்தை நிலைகுலைக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பி. தலைவர் சோமவன்சவின் உள்நோக்கம் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் -

எந்த ஒரு நாட்டிலும் இராணுவமுமின்றி நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியுமா? என்பதைச் சோமவன்ச அமரசிங்க தெரிவிக்க வேண்டும். நாட்டைப் பல ஆண்டுகளாக ஆட்சி செய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு போதும் இராணுவத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை.

ஜே.வி.பியின் கொள்கையோடு என்னால் உடன்படமுடியாது . அந்தக் கட்சி நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களைத் தெரிவித்து வருகிறது. அவர்களின் கருத்து மீண்டும் யுத்தத்தை நோக்கிச் செல்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நோர்வே...

கொழும்பில் அரச தலைவர்கள் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

அதன் பின்னர் கிளிநொச்சி சென்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது போர்நிறுத்த அமுலாக்கத்தை முழு அளவில் செயற்படுத்துவதற்கான கூடுதல் சரத்துக்களை போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இணைப்பது தொடர்பாக விவாதிக்கப்படக் கூடும் என்று தெரிகிறது.

இந்தச் சந்திப்புகளுக்குப் பின்னர் எதிர்வரும் 18 ஆம் திகதி நாடு திரும்பும் இவர் தனது சந்திப்பு விபரங்களை நோர்வே அரசிடம் தெரிவிக்க விருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிப்பாயின்...

அடையாளம் தெரியாமல் இந்தத் துப்பாக்கிச் சூட்டை தான் மேற்கொண்டதாகவும் உப்புவெளி பொலிஸாரிடம் அளித்துள்ள வாக்குமூலத்தில் அந்த இராணுவச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் தற்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - இராணுவ பொலிஸாரும் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## சந்திரிகா...

ரிரந்தி ராஜபக்ஷ ஆகியோரும் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. யுனெஸ்கோ கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிரான்ஸ் சென்றிருந்த சந்திரிகா சனிக்கிழமை அதிகாலை நாடு திரும்பினார்.

இதன் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள், ஜாதிக ஹெலஉறுமய மற்றும் ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உடன்படிக்கைகள், ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

சுதந்திரக்கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், சந்திரிகாவின் அனுமதியைப் பெற்றபின்னர் இந்தவாரம் தேர்தல் அறிக்கையை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் நாட்களில் நடத்தப்படும் மகிந்தவின் பிரசாரக் கூட்டங்களில் சிலவற்றில்தான் கலந்துகொள்வதாகவும் இந்தச் சந்திப்பின்போது சந்திரிகா உறுதியளித்தார்.

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.